Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
மகாராசி சில்க்ஸ்
சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்
மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P No - 0777286247
(c-2203)

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 18(04.10.2004) திங்கட்கிழமை இதழ்: 04

# தேசிய ஆலோசனைச் சபை என்ற பெயரில் காலத்தை இழுத்தடிக்கும் முயற்சிக்கு எதிர்க்கட்சிகள் இணைந்து எதிர்ப்பு!

## ஆனாலும் கூட்டத்தை நடத்துவதில் சந்திரிகா விடாப்பிடி

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அனைத்துக் கட்சிகளும் அடங்கிய – தேசிய ஆலோசனைச்சபையை அமைப்பதற்கான உத்தேச கூட்டத்தை பிரதான எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி ஜனாதிபதி சந்திரிகா இன்று கூட்டுவதற்கான நடவழக்கைகளை எடுத்திருக்கிறார்.**

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ள இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்திருந்த போதும் - பிரதான கட்சிகள் இந்தக் கோரிக்கையை நிராகரித்திருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா உடனடிப் பேச்சுக்களைத் தவிர்க்க - காலத்தை இழுத்தடிக்கவே இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதாகவும் இதற்குத் தாம் ஒருபோதும் உடன்பட முடியாதெனவும் கூறி,

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய எதிர்க்கட்சிகள் இந்த அழைப்பை நிராகரித்திருக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமின் கோரிக்கை ஜனாதிபதி மௌனம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கும் தமது கோரிக்கை குறித்து உத்தியோகபூர்வமாக எவ்வித பதிலும் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியால் இன்று உத்தேச தேசிய ஆலோசனை சபை அங்குரார்ப்பண நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய ஆலோசனைசபை கூட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி புறக்கணிப்பது ஜனாதிபதிக்கு ஆச்சரியமளிக்கிறதாம்!

(கொழும்பு)

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச் சபையின் பூர்வாங்கக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கியதேசியக் கட்சியும் கலந்துகொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளமை - தன்னையும், அரசாங்கத்தையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்று ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி சந்திரிகா அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச் சபையின் பூர்வாங்கக் கூட்டத்தில் கலந்துகொள்ளப்போவதில்லை என்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கூறும் காரணங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் நூல் வெளியீடு!




(ஜெனீவா)

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பன்முக ஆளுமையைச் சித்தரிக்கும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் சுவிற்சர்லாந்தில் நடைபெற்றது.

**Prabhakaran a leader for all seasons** என்னும் இந்த நூல் வெளியீட்டு விழா, பேர்லின் நகரில் மண்டபம் நிறைந்த மக்களுடன் நடைபெற்றது.

சுவிஸ் நேரம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இந்த விழா ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக, தமிழீழ தேசியக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாவது நாளாக நேற்றும் ஜெனீவாவில் கலந்துரையாடல்!





(ஜெனீவா)

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் குறித்து சட்ட நிபுணர்களுடனான கலந்துரையாடல் நேற்று மூன்றாவது நாளாகவும் ஜெனீவாவில் இடம்பெற்றது.

மூன்றாவது நாளாக நேற்று இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் நகர்த்திச்செல்வது தொடர்பாக புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் மேலும் சில சட்ட வல்லுநர்களுடன் நுணுக்கமாக ஆராயப்பட்டது.

நேற்றைய கலந்துரையாடல்களின்போது நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமடியாமடு தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் அறிக்கை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் கருணா குழுவின் மறைவிடம் மீதான தாக்குதலின்போது, ஆயுதங்களும் இராணுவத் தளபாடங்களும் தங்களால் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை நேற்று அறிவித்தது.

நேற்றுமுன்தினம் காலை வாகரைப் பிரதேசம் - மதுரங்குளம் ஓமடியாமடுவில் இடம்பெற்ற அதிரடி நடவடிக்கை தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறையால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் -

கடந்த சனிக்கிழமை காலை 6.45 மணியளவில் வாகரை ஓமடியாமடுவில் கருணா குழு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பொலிஸ்மா அதிபர் இன்று பதவியேற்கிறார்!



(கொழும்பு)

இலங்கையின் 29 ஆவது பொலிஸ் மா அதிபராக சந்திரா பெர்னாண்டோ இன்று பதவியேற்கவுள்ளார்.

பொலிஸ் மா அதிபராக இருந்த இந்திர டி சில்வா கடந்த வாரம் ஓய்வு பெற்றதையடுத்தே இவர் இப் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies..





சுவிசில் நடைபெற்ற Prabaharan a leader for all seasons நூல் வெளியீட்டு விழாவில் நூல் வெளியீட்டு சிறப்புப் பிரதிகளை காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் கையளிப்பதையும் - நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.



வெளியீட்டு விழாவில் நீதித்துறைப் பொறுப்பாளர் பரா



புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன்



மட்டு- அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்



காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்



நேரு குணரட்ணம்

## கமநலசேவை திணைக்களம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாய கால்நடை அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் சுமார் 40 லட்சம் செலவில் காரைநகரில் புதிதாக அமைக்கப்பட்ட கமநல சேவைத் திணைக்களம் இன்று காலை திறந்துவைக்கப்படவுள்ளது.

காரைநகர் பிரதேச கமநல சேவைக் குழுத் தலைவர் அ.சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட உதவி கமநலசேவைத் திணைக்கள ஆணையாளர் கே.சுந்தரேசன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர், கிராம சேவகர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(52)


### பெயர் மாற்றம்

பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத்தெருவை சொந்த இடமாகவும், 1973.11.24 ஆம் திகதி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பிறந்த **சின்னத்தம்பி வேல்ராணி** ஆகிய நான் இன்றுமுதல் **சின்னத்தம்பி கௌசலியா** என பெயர் மாற்றம் செய்கின்றேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு
கௌசலியா


## தில்லையம்பதி சிவகாமி ஆலயத்தில் பெறுமதி மிக்க பொருட்கள் திருட்டு!

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணிக்கும் 4 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் பெறுமதிமிக்க பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

வானில் வந்தவர்களே இந்தத் திருட்டை மேற்கொண்டிருக்கவேண்டும் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

ஏனெனில், ஆலயத்தினுள் நுழைவதற்கு வானை ஆலய சுவரருகே நிறுத்திவிட்டு அதன் மீதேறியே கூரையைப் பிரித்து ஆலயத்தினுள் இறங்கித் திருடியுள்ளனர். வான் நிறுத்தப்பட்ட இடத்திற்கான தடங்கள் அப்பகுதியில் காணப்படுகின்றன.

ஆலயத்தின் மூலஸ்தானம், வசந்த மண்டபம் முதலானவற்றை கள்ளத் திறப்புக்கள் மூலம் திறந்து உள்நுழைந்த திருடர்கள் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான விலையுயர்ந்த பொருட்களைத் திருடிச்சென்றனர்.

மூலஸ்தான மூர்த்தியின் கீழ் வைக்கப்பட்டிருந்த இயந்திரத்தகடு மற்றும் பல ஆண்டுகளுக்குமுன் அவ்விடத்தில் புதைக்கப்பட்டிருந்த நவரத்தினக்கற்கள், ஆலய ஒலிபெருக்கிச் சாதனங்கள், சி.டி.பிளேயர், அர்ச்சனைப்பெட்டியிலிருந்த 4 ஆயிரம் ரூபா பணம் உள்ளிட்ட பொருட்களே களவாடப்பட்டுள்ளன. (82)


ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)
(சி-2725)



திரைச்சனல் சங்கானை
தனுஷ், சிந்துதொலானி, கருணாஸ் மற்றும் மணிவண்ணன் நடித்த
திருடா திருடி
தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)
MEET THE PARENTS
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
(சி-2723)





பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# மட்டக்களப்பு எம்.பிக்கு கொலை அச்சுறுத்தல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்திக்கு தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெறவிருந்த கிரான் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளக்கூடாது என்றே இந்த கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் ஆரம்பக் கல்வி கற்ற இந்தப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில், பிரதம அதிதியாக கலந்து கொள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி அழைக்கப்பட்டிருந்தார்.

இவருடன் சிறப்பு அதிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், த.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு மட்டும் இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

"தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நீ பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டால் கொலை செய்யப்படுவாய்'' என இந்தக் கொலை அச்சுறுத்தலில் தனக்கு விடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

மேலும் தேசவிரோதக் கும்பலுடன் தொடர்புடைய இருவருடைய பெயரைக் கூறியே இந்த அச்சுறுத்தல் தனக்கு கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து விடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரதி அமைச்சர்களின் ஊழல்கள் குறித்து ஜனாதிபதிக்கு முறையிட நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதி அமைச்சர்கள் சிலர் தொடர்பாகக் கிடைத்துள்ள இலஞ்ச மற்றும் ஊழல் நடவடிக்கைகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவர அமைச்சர்கள் சிலர் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரியவருகிறது.

விசேடமாக பிரதி அமைச்சர்கள், இருவரின் இலஞ்ச மற்றும் ஊழல்கள் தொடர்பான கடிதக்கோவைகளை இன்றே ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு இந்த அமைச்சர்கள் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சில அமைச்சர்கள் பற்றிப் பொய்யான குற்றச்சாட்டுக்களைக் கூறிப் பலவித நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் குறிப்பிட்ட பிரதி அமைச்சர்கள் குறித்து மக்களுக்கு வெளிப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம் என்றும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர்களுக்கு கணினிப் பயிற்சி!

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ஜி.ரி.இசற் நிறுவனம் ஆகியன இணைந்து திருகோணமலை மாவட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கான கணினிப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். ஊடகங்கவியலாளர்களுக்கு நவீன தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்கும் நோக்கிலே இணையம் மற்றும் மின்னஞ்சல் உட்பட கணினிப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நெறிகளில் மூவினங்களையும் சேர்ந்த 60 பேருக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சி நெறி ஒருமாத காலத்தைக் கொண்டதாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பயிற்சி நெறிக் குழுவினரால் திருமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான தொழில்சார் பயிற்சிகளையும் வழங்கவுள்ளது. இந்தப் பயிற்சித் திட்டத்தின்கீழ் முதலாவது தொகுதி ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிகள் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதிவரை ஓசானிக் விடுதியில் இடம்பெறவுள்ளன. முதலாவது பயிற்சித்திட்டத்தின்கீழ் 15 தமிழ் ஊடகவியலாளர்கள் பயிற்சிகளைப் பெறவுள்ளனர். (10)

# சமாதான பிரதிநிதிகளின் பயணத்தால் வான்படைக்கு 15 கோடி ரூபா நஷ்டமாம்!

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தகாலங்களில் சமாதான பிரதிநிதிகளின் இலங்கைக்கான விஜயங்களுக்காக இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களைப் பயன்படுத்தியமையால் விமானப்படைக்கு 15 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பிரமுகர்கள், நோர்வே சமாதானப் பிரதிநிதிகள் வெளிநாட்டு அரச சமாதானப் பிரதிநிதிகள் ஆகியோர் 1270 மணித்தியாலங்கள் இந்த விமானங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

2002 பெப்ரவரியில் இருந்து இதுவரை வெளிநாட்டு பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் தலைவர்களும் சுமார் 500 தடவைகள விமானப் பயணங்களை மேற்கொண்டனர்.

விமானமொன்றில ஒரு மணித்தியாலத்துக்காக ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது. எனினும் இதற்காக எந்தவித கொடுப்பனவுகளும் அறிவிடப்படவில்லை. விமானப் பயணிகளுக்காக பெல் 212 ஐ எம்.எல்.17 ரக ஹெலிகள் பாவிக்கப்பட்டதாக விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

# சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் மட்ட பிரமுகர்கள் இவ்வாரம் இலங்கை வருவர்

(கொழும்பு)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் வூ சுவாங் செவ் உட்பட ஆறுபேர்கொண்ட உயர்மட்டக்குழு இந்தமாதம் 7 ஆம் திகதியிலிருந்து 10ஆம் திகதிக்குள் கொழும்பு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விசேட அழைப்பின் பேரிலேயே இவர்கள் வருகைதரவுள்ளனர்.

கொழும்பு வரவுள்ள வூ சுவாங் செவ் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் ஒழுங்கு நடவடிக்கைக்குழு செயலாளராக உள்ளார். இவருடன் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐந்து சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளும் வருகைதரவுள்ளனர்.

இவர் தனது விஜயத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல்களை நடத்துவர். அதன்பின் நாடாளுமன்றம் செல்லும் இவர்கள் அங்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார உட்பட அரசியற் கட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதன் பின்னர் இவர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் இறுதியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்து கலந்துரையாடுவார் என தெரிவிக்கப்படுகிறது.

# அரச ஊழியர்களுக்கு 30 வீதமே சம்பள உயர்வு வழங்கப்படுமாம்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தை 70 வீதத்தால் அதிகரிப்பதென்றால் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 9 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்க வேண்டும். ஆனால், 4 ஆயிரம் கோடி ரூபா நிதியையே அரசாங்கத்தால் ஒதுக்கமுடியும் என நிதி அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி 2005 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு 30 வீதமான சம்பள உயர்வை மாத்திரமே வழங்கக்கூடியதாக இருக்கும்.

இதுதவிர தற்போது பட்டதாரிகள் நியமனத்தின்பொருட்டு பயிற்சிகளில் இணைத்துக்கொள்ளபபட்ட பட்டதாரிகளுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வீதம் சம்பளம் வழங்குவதற்காக 250 கோடி ரூபா ஒதுக்க வேண்டியுள்ளது.

எனவே இந்தத் தடவை வரவு-செலவுத் திட்டத்தின்மூலம் அரச ஊழியர்களுக்கு 30 வீதத்துக்கும் அதிகமான சம்பள உயர்வை எதிர்பார்க்கமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## சீனாவிலிருந்து பயிற்சி விமானங்கள்

(கொழும்பு)

விமானப் படையினர் பயிற்சி நடவடிக்கைகளுக்காக சீனாவிடமிருந்து மூன்று விமானங்களைப் பெறுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாம்.

அனேகமாக அடுத்த நவம்பர் மாதமளவில் இந்த மூன்று விமானங்களும் இங்கு கொண்டுவரப்படும் என சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்தார்.

## தனியார் வாகனங்களிடம் வரி அறவிட ஆலோசனை

கொழும்புக்குள் நுழையும் அனைத்துத் தனியார் வாகனங்களிடமிருந்தும் வரியை அறவிடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தினமும் பெருமளவு தனியார் வாகனங்கள் கொழும்பு நகருக்குள் நுழைவதால் வாகன நெரிசல் நிலவுவதையும், காரணமின்றி நகரினுள் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதைத் தடுப்பதற்காகவும், அரசுக்குப் பெருமளவு வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பதற்குமாக இந்த வரியை அறவிடுவதற்கு, அரசின் கொள்கைத் திட்டமிடல் பிரிவு அமைச்சரவைக்கு ஆலோசனை சமர்ப்பித்துள்ளது.

## யாழ்.மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வுகளின் சில காட்சிகள்.



# சிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் பாகிஸ்தான் தடுமாறி வென்றது



பாகிஸ்தான், இலங்கை, சிம்பாப்வே அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் - நேற்று நடைபெற்ற பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான பரபரப்பான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

பெஷாவரில் நேற்று நடந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் சிம்பாப்வே அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

சிம்பாப்வே அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மற்சிகென்யேரியும், ரெய்லரும் இணைந்து பாகிஸ்தான் அணி வீரர்களின் பந்துகளை இலகுவாக எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்தனர்.

சிம்பாப்வே 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதே பாகிஸ்தான் அணியால் முதல் விக்கெட்டை வீழ்த்த முடிந்தது. 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த மற்சிகென்யேரி அப்ரிடியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்து வந்த சிபண்டா எந்தவொரு ஓட்டத்தையும் பெறாமலேயே ரன் அவுட்டாகி வெளியேறினார். அடுத்ததாக களம் இறங்கிய இப்ராகிம், ரெயிலருடன் இணைந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சுக்களை இருவரும் இணைந்து அபாரமாகத் தடுத்தாடினர். சிம்பாப்வே 159 ஆவது ஓட்டங்களைப் பெற்றபோதே அடுத்த விக்கெட்டை வீழ்த்த முடிந்தது.

122 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 73 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரெயிலர் ஆட்டமிழந்து சென்றார்.

இதனையடுத்து களம் இறங்கிய வெர்மியூலன் ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்ப - அணித்தலைவர் தைபு களம் இறங்கினார்.

தைபுவின் அபாரமான துடுப்பாட்டத்தால் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் நிலைதடுமாறிப் போனார்கள். 33 பந்துகளில் 1 பவுண்டரி, 3 சிக்சருடன் இவர் 46 ஓட்டங்களைக் குவித்தார்.

ஆட்ட முடிவில் தைபு 46, இப்ராகிம் 71, ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். 50 ஓவர்கள் நிறைவில் சிம்பாப்வே அணி 252 ஓட்டங்களை 4 விக்கெட் இழப்புக்குப் பெற்றது.

நவீட் உல் ஹசன் 82 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், அப்ரிடி 39 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அணி முதல் ஓட்டத்தைப் பெற்ற நிலையிலேயே யாசிர் ஹமீட்டின் விக்கெட்டைப் பறிகொடுத்தது.

அடுத்து வந்த பசீட் கான் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்து சென்றார். அடுத்து வந்த சொகைப் மலிக் அபாரமாக ஆடி 80 ஓட்டங்களைப் பெற்றார்.

இதற்கிடையில் சல்மான் பட் 30 ஓட்டங்களையும், மிஸ்பா வுல்ஹக் 23 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

யுனுஸ்கான் 77 ஓட்டங்களையும், யுகானா 14 ஓட்டங்களையும் பெற்று தடுமாறியபோதும் அப்ரிடி 6 பந்துகளில் 2 சிக்சர்கள் அடங்கலாக 16 ஓட்டங்களை எடுத்ததால் பாகிஸ்தான் அணி தோல்வியில் இருந்து மீண்டது.

48.1 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தான் 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் பன்யன் கார 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ஹொன்டோ 61 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் என்காலா 41 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.



## தாய்லாந்து ஓபன் ரெனிஸ் இறுதிப் போட்டியில் பெடரர்



(பாங்கொக்)

தாய்லாந்து ஓபன் ரெனிஸ் போட்டி பாங்கொக்கில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் 2 ஆம் நிலை வீரர் அன்டி ரொடிக் (அமெரிக்கா), 4 ஆம் நிலை வீரர் மரட் ஷபினை (ரஷ்யா) எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ரொடிக் 7-6, 6-7, 7-6 என்ற செட் கணக்கில் மரட் ஷபினை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இறுதிப்போட்டியில் அன்டி ரொடிக், முதல்நிலை வீரர் ரோஜர் பெடரருடன் (சுவிட்சர்லாந்து) மோதுவார். பெடரர் அரையிறுதியில் 7-5, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் தாய்லாந்து வீரர் பரோடன் ஸ்ரீசேப்பனை தோற்கடித்து இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றார்.




# அவுஸ்ரேலிய - மும்பை அணிகள் மூன்று நாள் போட்டி சமநிலையில்



அவுஸ்ரேலிய - மும்பை அணிகள் இடையேயான மூன்றுநாள் கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிந்தது.

4 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாட அவுஸ்ரேலிய அணி இந்தியா வந்துள்ளது.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெங்களூரில் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அவுஸ்ரேலிய - மும்பை அணிகளிடையேயான மூன்று நாள் கிரிக்கெட் பயிற்சியாட்டம் மும்பையில் நடைபெற்றது. முதலில் விளையாடிய அவுஸ்ரேலிய அணி இரண்டாவது நாளில் ஏழு விக்கெட் இழப்பில் 302 ஓட்டங்களைக் குவித்து டிக்ளேர் செய்தது. மார்ட்டின் 71 ஓட்டங்களைக் குவித்தார்.

பின்னர் முதல் இனிங்ஸை தொடங்கிய மும்பை அணி இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 150 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் மூன்றாவது நாள் மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து ஆடிய மும்பை அணி 255 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஜாபர் 48 ஓட்டங்களும் மசும்தார் 52 ஓட்டங்களும் அகர்கர் 37 ஓட்டங்களும் எடுத்தனர். மக்ரா 4 விக்கெட்டும், பிரட்லீ, வாட்சன் தலா இரண்டு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பின்னர் இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கிய அவுஸ்ரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் லாங்கர், கிளார்க் ஆகியோர் அடித்து ஆடினார்கள். இருவரும் மும்பை வீரர்களின் பந்து வீச்சை விளாசித் தள்ளி ஓட்டங்களைக் குவித்தனர்.

முதல் விக்கெட்டுக்கு இருவரும், 142 ஓட்டங்களைச் சேர்த்தனர். கிளார்க் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். லாங்கர் 108 ஓட்டங்களில் ஓய்வு பெற்று வெளியேறினார்.

அவுஸ்ரேலிய அணி 54 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 207 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் இரு அணி கப்டன்களும் கலந்துபேசி ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக முடிவெடுத்தனர். இதனால் இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

# ஜேர்மன் ரெனிஸ்போட்டி: செரினாவும் விலகினார்!



ஜேர்மன் ரெனிஸ் தொடரில் இருந்து முன்னணி வீராங்கனைகள் செரீனா வில்லியம்ஸ், ஜெனிபர் கேப்ரியாட்டி ஆகியோர் விலகிக்கொண்டதாக அறிவித்துள்ளனர்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் ரெனிஸ் போட்டி, ஜேர்மனி நாட்டின் பில்டர்ஸ்டட் நகரில் அடுத்தவாரம் ஆரம்பமாகிறது. வைரஸ் காய்ச்சல் காரணமாக இந்தத் தொடரில் இருந்து பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் கடந்த வாரம் விலகிக்கொண்டார். விலகல் பட்டியல் மேலும் தொடர்கிறது.

அமெரிக்க வீராங்கனைகள் செரீனா வில்லியம்ஸ் காயம் காரணமாகவும், ஜெனிபர் கேப்ரியாட்டி உடல் நலக்குறைவாலும் இந்தத் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

# பெங்களூரில் ஆரம்பமாகும் டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் விளையாடுவது சந்தேகம்!



(மும்பை)

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பெங்களூரில் நடைபெறவுள்ள டெஸ்டில் டெண்டுல்கர் விளையாடுவாரா என மீண்டும் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்திய - அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணிகள் இடையே முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூரில் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான 15 இந்திய வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் டெண்டுல்கர் பெயரும் இடம்பெற்றிருந்தது. இடது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக மினி உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்க முடியாமல் போன டெண்டுல்கர் இப்போது குணம் அடைந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது.

டெண்டுல்கரும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்டுகளில் விளையாடமுடியும் என நம்பிக்கையோடு இருப்பதாக தெரிவித்தார். 3 ஆம் திகதி பெங்களூருக்கு டெண்டுல்கர் வருவார். பயிற்சியில் ஈடுபடுவார் என்றும் சொல்லப்பட்டது.

டெண்டுல்கருக்கு எப்போதுமே தொடக்க வீரராகக் களமிறங்க வேண்டும் என்பதில் தான் மிகுந்த விருப்பம் உண்டு. ஆனால், கப்டன் கங்கூலி இதை விரும்புவதில்லை.

முதல் ஆளாக டெண்டுல்கர் ஆட இறங்குவதால் அவருக்கு நிறைய நேரம் கிடைக்கிறது. அதனால் நிறைய சதம் அடிக்கிறார், ஓட்டங்களைக் குவிக்கிறார், உலக சாதனை படைக்கிறார், இது கூடாது. அவரது வேகத்துக்கு கால்கட்டு போடவேண்டும் என்பதே கங்கூலியின் எண்ணம்.

இதற்காக அவர் பலமுறை காய் நகர்த்தி இருக்கிறார். சில போட்டிகளில் டெண்டுல்கரை மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரராக களம் இறக்கியுள்ளார். இப்போது அவுஸ்ரேலியாவுக்கு எதிராகத் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்க ஆசையோடு இருந்த டெண்டுல்கரின் எண்ணத்தில் மண்ணை அள்ளி போட்டது இந்திய கிரிக்கெட் சபை.

இந்திய அணி சார்பாக தொடக்க வீரராக ஷேவாக் - ஆகாஷ் சோப்ரா களம் இறங்குவார்கள் என்று அறிவித்தது. இதில் கப்டன் கங்கூலியின் மறைமுக கை இருப்பதாக கூறப்படுகிறது.

தொடக்க வீரராக டெண்டுல்கரை இறக்காமல் ஷேவாக் - சோப்ரா ஜோடி களம் இறங்கும் என அறிவித்ததற்கு பின்னணி கங்கூலியே என கூறப்பட்டது.

இது காயமடைந்து மீண்டும் உடல்நலம் பெற்று ஆடத் திரும்பும் டெண்டுல்கர் மனநிலையை மிகவும் பாதித்து விட்டதாக சொல்லப்படுகிறது. எனவே மீண்டும் உடல் நிலை சரியாகவில்லையென்ற காரணத்தைக் கூறி டெண்டுல்கர் ஒதுங்கிக்கொள்ளக்கூடும் எனத் தெரியவருகிறது.

எனவே 6 ஆம் திகதி தொடங்கும் பெங்களூர் டெஸ்டில் டெண்டுல்கர் ஆடுவாரா? என்பது சந்தேகமே என்று அவரைச் சார்ந்த வட்டாரத்தில் சொல்லப்படுகிறது.

# இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை சந்திப்பதற்கு புதிய திட்டம்

## அவுஸ்ரேலிய வீரர் மார்ட்டின்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் புதிய அணுகுமுறையைக் கையாளப் போவதாக அவுஸ்ரேலிய அணி வீரர் டேமியன் மார்ட்டின் தெரிவித்தார்.

இந்திய - அவுஸ்ரேலிய டெஸ்ட் தொடர் ஆரம்பமாக இன்னும் இரண்டு நாட்களே உள்ளன. ரசிகர்களால் இந்தத் தொடர் வெகு ஆர்வமாக எதிர்பார்க்கப்படுகிறது. அவுஸ்ரேலியர்கள் பொதுவாக, இந்திய சுழற்பந்து ஆடுகளங்களில் பெரிதாக சாதித்ததில்லை.

கடந்த பயணத்தில் ஹர்பஜன் சிங் சுழலில் ஆட்டமிழந்து தொடரை இழந்தனர். இம்முறை இந்திய சுழற்பந்துவீச்சாளர்களுக்கு எதிராகப் புதிய அணுகுமுறையைக் கையாளப் போகிறார்களாம்.

அந்த அணியின் வீரர் டேமியன் மார்ட்டின் கூறுகையில் - கடந்தமுறை சுழற்பந்து வீச்சில் நாங்கள் தடுமாறியதை வைத்து இப்போது ஒரு முடிவுக்கு வரவேண்டாம். இப்போதெல்லாம் நாங்கள் நிறையப் போட்டிகள் விளையாடுகிறோம்.

"கடந்த ஆண்டு இங்கு நடந்த ஒரு நாள் தொடரை வென்றிருக்கிறோம். அது எங்களுக்கு கூடுதல் தன்னம்பிக்கை அளித்திருக்கிறது. இந்திய சுழற்பந்து வீச்சாளர்களைச் சமாளிக்க இம்முறை புதிய அணுகுமுறையைப் பின்பற்றப் போகிறோம். மாறுபட்ட ஒரு ஆட்டத்தை இந்தத் தொடரில் நீங்கள் காணலாம்." என்றார்.

# நடைபாதையில் பழம்விற்றோர் நீதிமன்றத்தில் ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியின் நடைபாதையில் பழம்விற்ற இருவர் யாழ். மாநகரசபை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்.மாநகரசபையினரால் பல தடவைகள் எச்சரிக்கப்பட்டும் நடைபாதையில் வைத்து பழ வியாபாரம் நடத்தியவர்களே இவ்வாறு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவருக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா ஐந்நூறு ரூபா அபராதம் விதித்திருந்தார். மற்றவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமையால் அவரது வழக்கு வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பழங்களை கோண்டாவில் சிவபூமி வலுவிழந்தோர் பராமரிப்பு நிலையத்துக்கும், நீதி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட 'கானான்' சிறுவர் இல்லச் சிறார்களுக்கும் வழங்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ப)

# சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழா!

சென்.பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டம் ஒக்ரோபர் 9, 10 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளின் கூட்டுத் திருப்பலியுடன் 9 ஆம் திகதி இந்த விழா ஆரம்பமாகும். முதலாம் நாளில் ஒன்றுகூடல் நிகழ்வும், துடுப்பாட்டப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி, தேநீர் விருந்து என்பன இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வாக நூற்றாண்டு தொடர்பான மலர் வெளியீடும், பழைய மாணவர் கௌரவிப்பு நிகழ்வும், பரீட்சைகளில் சித்திபெற்று சிறந்த புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு, கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு என்பனவும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வின் இறுதியில் யாழ்.திருமறைக் கலாமன்றத்தினரின் கலைநிகழ்வுகள், அதனைத் தொடர்ந்து இராப்போசன நிகழ்வு இடம்பெறுமென கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# நெடுந்தீவில் அதிகரித்துவரும் சட்டவிரோத மதுபான விற்பனை

நெடுந்தீவுப் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனை அதிகரித்துள்ளமை தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அங்கீகாரம் பெற்ற மதுபான விற்பனை நிலையம் எதுவுமின்மையால் பலர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சொந்த வீடுகளில் வைத்து சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் துறைமுகம் ஊடாக ஒருவர் இரு மதுபானப் போத்தல்களை மட்டுமே கொண்டுவரமுடியும் என்பதால், இந்த சட்டவிரோத விற்பனையாளர்கள் பெருமளவு மதுபானங்களை எடுத்துவந்து குறிகாட்டுவான் துறைமுகத்தில் வைத்து தமக்குத் தெரிந்த நெடுந்தீவுப் பயணிகளிடம் இரு போத்தல் கள்வீதம் கொடுத்து நெடுநதீவுக்கு எடுத்துவருவதாகவும், இதனால் படகுப் பயணிகளுக்கும் பெரும சிரமம் ஏற்படுவதாகவும் பயணிகள் மத்தியிலும் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (113)

# குடாநாட்டு கடற்தொழிலாளர் பிரச்சினை; இந்திய பிரதிநிதிகளுக்கு எடுத்துரைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்பரப்பில் இந்திய கடற்தொழிலாளர்கள் தொடர்ந்தும் அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபட்டு வருவதால் எமது தொழில் பாதிக்கப்படுவதுடன், கடற்தொழில் உபகரணங்களும் சேதமாக்கப்படுகின்றன.

இதனைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவிபுரிய வேண்டுமென குருநகர் கடற்தொழில் அபிவிருத்தி முன்னணி சங்கப் பணிமனையில் கடந்த வெள்ளியன்று இந்திய கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சம்மேளனப் பிரதிநிதிகளுக்கும் குருநகர் கடற்தொழில் அபிவிருத்திமுன்னணி பிரதிநிதிகளுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பில் குருநகர் கடற்தொழில் அபிவிருத்தி முன்னணிப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய கடற்தொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகளிடம் அவர் தொடர்ந்து கூறுகையில் -

இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகபட்டினம், தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்துவந்து எமது கடற்பரப்பில் இழுவைப் படகுகளிலும், சாதாரண படகுகளிலும் தொழிலில் ஈடுபடும் கடற்தொழிலாளர்களால் எமது கடற்தொழிலாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

எமது பிரதேசத்தில் தங்கூசி வலை தொழில் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தியத் தொழிலாளர்கள், தண்டுவலை, தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பாவித்துத் தொழில் செய்வதால் தங்கூசி வலைகள் மூலம் கடல் நீரினுள் ஏற்படும் இரைச்சல் காரணமாக எமது படுப்பு வலைகளில் மீன்பிடிபடுவது குறைவாக இருப்பதுடன் சில வேளைகளில் அறவே மீன்பிடிபாடு இல்லாது போய்விடுகின்றது.

ஆகவே, இந்த மாவட்டங்களிலிருந்து எமது கடற்பிரதேசத்தில் கடற்தொழிலில் ஈடுபடும் சங்கங்களின் பிரதிநிதிகள், தொழிலாளர்களை அழைத்து எமது ஆதங்கத்தையும், குறைகள் கோரிக்கைகளையும் அவர்களிடம் நேரில்கூறி எமது பகுதி மக்கள் எந்தவித தடைகள் கஷ்டமுமின்றி தொழில்புரிய உதவி செய்யவேண்டுமென முன்னணிப் பிரதிநிதிகள் கூறினர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த தென்னிந்திய மீனவர் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதி ந.சுப்பிரமணியம், மீனவர் சங்கங்களின் அங்கத்தவர்களின் நலன் பேணும் பிரதிநிதி யு.அருளானந்தம் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு பதிலளிக்கையில் -

உங்கள் குறைகள், கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிறோம். உங்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள், குறைகள் பற்றி அவ்வப்போது ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம். ஆகவே இந்தியா சென்றதும் உங்கள் குறைகள் கோரிக்கைகள் பற்றி அதனுடன் சம்பந்தப்பட்ட சங்க அங்கத்தவர்களை ஒன்றுகூட்டி சகலவற்றையும் விளக்கமாக எடுத்துக் கூறி எந்தவித பிரச்சினைகளுமின்றி இருதரப்பாரும் தொழிலில் ஈடுபடக்கூடியதான வாய்ப்பு ஏற்பட எம்மாலான சகல பங்களிப்பையும் செய்வோமெனக் கூறினார். (21)

# இதழியல் கற்கைநெறிக்கு தெரிவானோர் சமுகமளிக்கவும்

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தால் யாழ். பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையும், எழுத்துப் பரீட்சையும் கடந்த மாதம் யாழ்.பல்கலைக்கத்தில் நடத்தப்பட்டது.

இதல் நூற்றுக்கணக்கானவர்கள் தோற்றியிருந்தனர். எனினும், இதில் மாவட்டத்தில் இருந்து 25 பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கற்கை நெறிக்கு தெரிவு செயயப்பட்டவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு முன்னர் நேரில் வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இணைப்பாளர் அறித்துள்ளார். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான விரிவுரைகள் மிகவிரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இவர்களுக்கான தனித்தனிக் கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பஸ்சாரதிகள் எதிர்கொள்ளும் பாரிய இடநெருக்கடி!

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடத்தில் பஸ், மினிபஸ் போன்றன ஓரமாக நிறுத்தி பிரயாணிகளை ஏற்றிச்செல்லமுடியாதிருப்பதாகவும், நடுவீதியிலேயே வாகனத்தை நிறுத்தவேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் பஸ் சாரதிகள் தெரிவித்தனர்.

இந்த இடத்தில் அமைந்துள்ள எரிபொருள் விற்பனை நிலையத்துக்கான பெரிய அடையாளச் சின்னமும், மைல கல்லும் (8 ஆம் மைல் கல்) அமைந்திருப்பதால் பாரிய வாகனங்களை ஓரமாக நிறுத்தி பிரயாணிகளை ஏற்றிச்செல்ல முடியாதுள்ளது. அதைவிடப் பெரிய சந்தை, கோவில், பாடசாலை, வர்த்தக மையம் என்பன அமைந்திருப்பதால எந்நேரமும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டவண்ணம் உள்ளது.

சிலவேளைகளில் பின்னால் வரும் வாகனங்கள் செல்லமுடியாமல் இருப்பதாகவும், இதனால் வீண் சச்சரவுகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே இந்தத் தடைநிலைகளைச் சற்றுப் பின்தள்ளி அமைத்துத்தர உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென சாரதிகளும், பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (101)

## நல்லொழுக்க தினம்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடாத்தும் சர்வதேச நல்லொழுக்கதினம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வட்டு மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. மேற்படி சம்மேளம், நல்லொழுக்கம் சம்பந்தமாக பல நிகழ்வுகளை நடாத்தவுள்ளதால் மக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (207)

## சட்டவிரோத மின்பாவனை வடமராட்சியில் அதிகரிப்பு

வடமராட்சியின் பல பகுதிகளிலும் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக துன்னாலை, கரவெட்டிப் பகுதிகளில் மின்கம்பிகளிலிருந்து இந்த மின்னை எடுப்பதால் மின் தடைப்படுதல், வலுக் குறைந்து கூடுதல் போன்றன ஏற்படுகின்றன. (14)



இலங்கை சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில், சைவ சித்தாந்த நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயரிடம் - கவிஞர் றஜீவன சிறப்புப் பிரதிபெறுவதைப் படத்தில் காணலாம் (91)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பரீட்சைகள் பிற்போடப்பட்டன

யாழ்.பல்கலைக்கழக 1 ஆம் வருட கலைப்பீட இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கு எதிர்வரும் 9, 10 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பரீட்சைகள் ஒக்ரோபர் மாதம் 13, 14 ஆம் திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளன.

இதில் முகாமைத்துவமும், முயற்சியான்மை திறன்களும் என்ற பரீட்சையும், சமூக நல்லிணக்கமும் தொடர்பாடல் திறன்களும் என்கின்ற பரீட்சையுமே பிற்போடப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விபரங்களை மாணவர்கள், கலைப்பீட விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம் என பரீட்சைக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தெரிவித்தார்.

## விவசாய உள்ளீடுகள் பெற்றுக்கொள்ளலாம்

கோவிலாக்கண்டி, மறவன்புலவு பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் இலவச உள்ளீடு, இலவச உரம் என்பனவற்றை கைதடி கமநல நிலையத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என கைதடி பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (29)

## பூட்சிற்றியில் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு அன்னை நாகா பூட்சிற்றியினால் சிறுவர் மற்றும் முதியோருக்கு இலவசமாக இனிப்புப் பண்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அன்னை நாகா பூட்சிற்றிக்கு சென்ற சிறுவர் மற்றும் முதியோர்களுக்கே கேக், ரொபி, பிஸ்கட் முதலான இனிப்புப் பண்டங்கள் அடங்கிய பொதி இலவசமாக வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ப)

## நெடுந்தீவுக்கு புதிய தபாலதிபர்

நெடுந்தீவு பிரதம தபாலகத்துக்கு புதிய தபாலக அதிபராக யாழ்ப்பாண உதவி தபாலதிபராக புணியாற்றிய பி.பிரேமதாஸ் கடந்த முதலாம் திகதிமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

1997 ஆம் ஆண்டு தொடக்கம் தற்பொழுதுவரை நெடுந்தீவு பிரதம தபாலதிபராக பணியாற்றிய நா. தங்கராசா ஓய்வுபெறுவதாலேயே புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : இ.ஆரங்கன்
முகவரி : சுவீடன்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்




நெல்லியடி கொமர்ஷல் வங்கியின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவின் போது வங்கி முகாமையாளர் கே.குணசிங்கம் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைப்பதையும், வாடிக்கையாளர்களையும் படத்தில் காணலாம். (116)




# கற்பொலி

கோ.கோகுலரதன்

சிறுகதை

மொட்டவிழும் புது ரோசா மலர் காலையிலை கண் விழிக்கும் கதிரவனால் பூரித்து விரிதல் போல அவள் முகம் ஆனந்தத்தால் பூரித்தது. அள்ளிச் சொரியும் அழகின் ஆலை. அற்புத நடை, அழகாக அசையும் இடை, அளந்து வைத்த மூக்கு, உன்னி இழுக்கும் உறுப்பியல் இத்தனைக்கும் மேலாய் எல்லா ஆடவரையும் வேண்டுமென்றே பார்க்க வைக்கும் வசீகரம், அவள் சொற்கள் அவனைப் பல்கலைக் கழக மாணவியாய் இனம் காட்டின.

''காய் துர்க்கா'', ''காய் அக்கா குடிவினிங்'' "நீர் வந்து லோங்டைமோ'' "ஓமக்கா நீங்கள் அறியல்லையே கல்வியங்காட்டில பஸ்ஸும் மோட்டச் சைக்கிளும் அக்சிடண்டாம்'' ''உண்மையாயோ'' இதிலையெல்லாம் பகிடியோ "எப்ப நடந்தது" இப்ப நாலு மணிக்குத்தானாம் நடந்தது. அதாலதான் பஸ் லேற்றாகுது போல" "ஆர் மோட்டச்சைக்கிளில் அடிபட்டது என்று தெரியுமோ'' போன வருசம் பாசவுட்டான அண்ணை ஒராளாம் ரீ.வீ.எஸ் சைக்கிளாம்'' இலக்கு வைத்துச் சுடப்பட்ட சினைப்பர் போல அவள் உள்ளமும் உடலும் துளைக்கப்பட்டன. "ஏனக்கா நீங்கள் அதுகசு..." அந்த போய்க்கு எப்பிடியாம்'' "அவர யாழ்ப்பாணம் கொஸ்பிற்றலில அட்மிட் பண்ணியிருக்காம்" என்ர நிஷாந்தனாய் இருக்கக் கூடாது. எனக்கு லெக்சர் சிக்சுக்கு முடியும் எண்டுதானோ வடமராட்சியில இருந்து வந்தாரோ.. அவனும் ரீ.வீ.எஸ் தானே என்றவன். என்ர நிஷாந்தனுக்கு ஒன்றுமே ஆகக்கூடாது" அவனுக்கு இந்தக்கதி.. நடந்திருக்க்க் கூடாது என தன் மனதிற்குள் ஆயிரம் தடைவை ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

''அக்கா 64 வருகுது வாங்கோ...''

"தம்பி இந்த லயினில பஸ் ஏன் இவ்வளவு லேற்'' "ஐயா அது அக்சிடன்ற் ஒன்று, அதால ''ஆர் தம்பி அக்சிலன்டில மாட்டினது'' ''அது வடமராட்சியில இருந்து வந்த கம்பஸ் பெடியனாம். படிப்பிக்கிறவராம் பஸ்சோட தட்டுப்பட்டுப் போனானாம்'' "சேதமா தம்பி'' "மோட்டச் சைக்கிள் பஸ்சோட என்றால் சொல்லவேணுமே...'' ஒரே குறியில் தவறாது விழுந்து வெடித்த மல்றி பரலால் சிதைந்த பனைமரம் போல தாட்சாயிணி மனம் சுக்குநூறாய் வெடித்துப் பரந்தது. "எல்லோரும் இறங்குங்கோ யாழ்ப்பாணம்...'' கூறி முடித்தார் கொன்டெக்ரர்.

தாட்சாயிணி கலை படிப்பவள், காலமெல்லாம் கலையைப் போற்ற நினைப்பவள். நிலைத்த பண்பாட்டை நேரிய வழியிலே பேணி வாழ்பவள். அதனால் நிதர்சனக் கொள்கையை நிதானமாய் கொண்டவள்., வீதியிலே சன நடமாட்டமற்று இருப்பது அவள் இதயத்தைத் தளர வைத்தாலும், அவளால் வைத்தியசாலை வளாகத்தை எட்டித் தொடமுடியவில்லை. ஆனால்.. அன்பு உள்ளம் மட்டும்...?

ooo

"ஆர் உது... தெரியல்லையோ.. சீ.. சிலவேளை எங்கட பக்கல்டிப் பெடியளோ அவங்கள் எண்டால்.. ஏன் கயேசில போறாங்கள். மோட்டச்சையிக்கிள்ள எல்லோ வருவாங்கள். சிலவேளை அக்சிடென்ற் என்றதால எல்லோருமா கயேசிலையோ? அப்படியெண்டால் ஏன் என்னை, என்னை உற்றுப் பார்த்துக் கொண்டு போகின்றார்கள்? ஆண்டவா...! என்ர, என்ர நிஷாந்தனுக்கு ஏதுமோ.. அதாலதான் பரிதாபத்தோட பாத்துக்கொண்டு...'' ஏக்கத் தொனிகள் மட்டும் அவள் இதயத்தை நிறைத்துக்கொண்டன.

"சீ எங்கட பக்கல்டி பெடியள் எண்டா வடிவாய்ப் பார்த்திருக்கலாம் ஆரெண்டு நான் ஆரோ என்று எண்ணுறதாலயெல்லோ மிஸ் பண்ணிற்றன்'' என தன்மனத்துக்குள் ஆதங்கப்பட்டுக் கொண்டாள். "ஏன் போன கயஸ் ஆஸ்பத்திரிக்குப் போகாமலே திரும்புது? ஏன்.. ஏன் சிலவேளை தெரிஞ்ச பெடியளோ? சீ அதுக்கு ஏன் வாகனத்தைத் திருப்போணும்..? அதப்ப ஆரோபோல ஏன் அது எனக்குப் பின்னால மீண்டும் வருகுது...?'' அக்கா ஏறுங்கோ... நாங்களும் நீங்க போற இடத்துக்குத்தானே போறம்'' "சீ வேண்டாம் உதுல தானே. நான் நடந்து வாறன். நீங்க போங்கோ'' இல்லையக்கா பின்னுக்கு சீற் இருக்கு. எங்கள் மூன்று பேரைத் தவிர, வேறு ஒருவரும் இல்லைத் தானே ஏறுங்கோ. "இல்லை வேண்டாம் கேட்டதுக்கு தாங்ஸ். நீங்கள் போங்கோ நான் வாறன் தம்பி'' "பிரச்சினையில்லையக்கா நீங்கள் ஏறுங்கோ நாங்களும் அங்கதானே வாறம்'' "ஏன் தம்பி என்ர நிஷாந்தனுக்கு என்ன நடந்தது?'' கண்களில் கண்ணிர் பனிக்க. தோட்டா இழந்த துப்பாக்கியோடு எதிரி ஓடவும் முடியாது. ஒழிக்கவும் முடியாது. விம்மி விழிப்பதுபோல துன்பப்பட்டாள் தாட்சாயணி "என்னக்கா நீங்கள் ஏறுங்கோவன் சொல்றம்..'' இவ்வளவு சொல்லியும் தாட்சாயிணி ஏறுவதாய்த் தெரியவில்லை. "அக்கா என்ன எங்களத் தெரியல்லையோ?'' "இல்லத்தம்பி சீரியசாத்தான் தெரியல்ல. நீங்கள் எங்கட பக்கல்டியோ தம்பி?'' பெண்ணின் உள்ளம் பதற்றத்தன்மையில் பிடியை விட்டுக் கொடுத்துவிட்டது. உறுதி உடையவள் பெண் என்றாலும், உற்றவனுக்கு ஒன்றென்றால் உள்ளம் என்னாகும்? என்னக்கா எங்களத் தெரியல்ல எண்டா...! "அது சரி தம்பி இப்ப நிஷாந்தனுக்கு எப்படி?' அதுதானக்கா ஏறுங்கோவன் சொல்லுறம்'' "என்ன தம்பி! என்ன நடந்தது? என்ர நிஷாந்தனுக்கு சொல்லுங்கோடா'' உரிமையோடு கேட்டாள் தாட்சாயிணி. "அக்கா என்ர கம்பஸ் ஐசியைக் காட்டட்டோ அவ்வளவு நம்பிக்கையில்லை என்டா'' "இல்ல வேண்டாம், தம்பி இப்ப நம்பிக்கையில தானே கொலையே நடக்குது'' கறுத்தக் கண்ணாடி இறைவனின் கோலம் இவையிரண்டும் தாட்சாவுக்குச் சஞ்சலத்தைக் கொடுத்தாலும், என்ன செய்வது உள்ளத்தில் கனதியாக பிரச்சினை துலாம்பரமாடியது. நிஷாந்தனுக்கு என்ன நடந்ததோ? அல்லது அவன் எப்படி இருக்கின்றானோ? "தம்பி நீங்கள் போங்கோ நான் வாறன்'' சற்று உச்சஸ்தானியில உலுப்பி பதில் கொடுத்தபடியே நடந்தாள். " அக்கா.. அக்கா நீங்கள உங்க ஆரப்பார்க்கப் போறியள்? உண்மையாத்தான் கேட்கிறன்...

ooo

"உங்கட அம்மாதான் ஏத்திவரச் சொல்லி அனுப்பினவா.. அதாலதான் உங்களைத் தேடி கம்பஸுக்குப் போய் நீங்கள் அங்கையில்லை எண்டதால. நல்லவேளை நாங்கள் இதில உங்களக் கண்டம். இல்லை எண்டால் வீணாத் திரும்பியிருப்பம்'' "உண்மையாவா'' "உண்மையாக அக்கா'' கதையோடு கதவு திறக்கப்பட்டது. கள்ளமறியாத பெண் ஏறி உட்கார்ந்து கொண்டாள். இறைவருடன் இருவரும் முன்னே ஏறி உடன் உட்கார்ந்து கொள்ளவே ஆட்லறித் தளத்தில் இருந்து கூவிச்செல்லும் எறிகணைபோல் கூவிக்கொண்டு பறந்தது கயேஸ். அதன் ஓட்ட அலையை சொல்லியது அவர்களின் வேற்றுமொழி உரையாடல். "தம்பி என்ர நிஷாந்தனுக்கு என்ன நடந்தது?'' ''சொல்லுறமக்கா பொறுங்கோ கொஞ்சம்'' முன்னே இருந்தபடி பதில் கொடுத்தான் பல்கலைக்கழக மாணவன் தான் என்றவன். "தம்பி கண்ணாடி திறபடுதில்லையே'' "எயாக்கொண்டிசன் கயேஸ் அக்கா, அப்படித்தானிருக்கும்'' "வெளியில ஒன்றும் தெரியலயே தம்பி, என்ன இது?'' அது காட் கூலிங்கிளாசக்கா'' தட்சாயிணி எண்ண அலைகளின் இழுபாட்டில் சிக்கிக்கொண்டிருந்தாள். "அக்கா நிஷாந்தன் என்ன செய்தவர்?'' "ஏன் தம்பி அவருக்கு ஏதும் நடந்திட்டுதோ'' பரிதாபத்துடன் கேட்டாள் தாட்சா. "இல்லையக்கா நான் சும்மா கேட்டனான்'' "அவர் போன வருசம் தான் பாசவுட் பண்ணினவர். இப்ப ரியூசன் பீல்ட்ல தான்''



"என்ன தம்பி ஏழு மணியாகுது எங்க போறியள்'' கோண் சத்தம், சிக்னல் சத்தம், இத்தனைக்கும் மேலால் ரயர் ஓடும் வேகச் சத்தம். இவை முடிய கண்ணாடிக் கூடாகவும் மெதுவாகக் கேட்கவே செய்தது. "என்னக்கா வீட்ட தானே போறம் உங்கட அம்மா அங்கதான் கூட்டி வரச்சொன்னவா, அங்கதானாம வைப்பினம்.'' ஓ..! வென்று உரத்துக் கத்தினாள் தாட்சா. ''தங்கச்சி வானுக்க கத்தக் கூடாது. வெளியில கேட்காது எண்டாலும் வான் ஓட ஏலாது கத்தினால், அதுக்கு மேல, கஸ்ரம் வரேக்க தொடர்ந்து தான் வரும். இப்படிக் கத்தேக்க எங்கட வாகனம் அக்சிடண்டில மாட்டிட்டா...'' தத்துவம் பேசினான் கயேஸ் சாரதி.



தாட்சா வந்த சோகத்தை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டாள். ஆனாலும் உள்ளம் எங்கே கேட்டது. தவித்து தவித்து கதறல் ஒலி கேட்கா விட்டாலும் கண்ணீர் காரணத்தைச் சொல்லி காதவழி தூரம் செல்லவே செய்தது. விம்மல், கதறல், முனகல், கண்ணீர் இவற்றுடன் சேர்ந்திருந்த தாட்சா, தன் வாழ்விலும் கனவிலும் காணாத புதிய அனுபவம், புதிய தேசம கதவு திறக்கப்பட்டது. திடுக்குற்ற தாட்சா மயங்குவதாய் உணர்ந்தாள். செய்வது அறியாது திகைத்தாள். கொடிய இருள் எங்குமே சூழ்ந்து கொண்டது. இனம்புரியாத முரட்டுத் தனமான முனகல்கள் காதுகளை முத்தமிட்டன. பொட்டொளி ஒன்று அவள் பாதம் முன்னே நிழலாடியது. நடவுங்க உந்த வெளிச்சம் நகர்கிற பாதைக்கு'' சற்றே நேரத்தில் குளிர்காற்று கப்பெனக் கௌவிக் கொண்டது. மயான அமைதி நிலைகொண்டிருந்த இடத்தில் தூய காற்று துரத்தப்பட்டிருந்தது.

ooo

"ஏன்..? ஏன்...? என்னை இஞ்ச ஏன் கொண்டாறியள்?'' கதைக்கும் இயக்கத்தைக் கூட இழந்த நிலையில் கேட்டாள் தாட்சா. "எல்லாம் சொல்லுவம் அம்மாதான் இஞ்ச கூட்டிவரச்சொன்னவா'' கனதியான குரல் ஒன்று காதருகே நின்று கர்ச்சித்தது. உடனாகவே அவளை அறியாமலே அவள் கைகளை விலங்குகள் பிணித்துக்கொண்டன. "என்ரை ஐயோ..! என்ரை அம்மா. என்னைக் காப்பாத்துங்கோ..'' என்று கத்தினாள் தாட்சா. ஆனாலும் என்ன? யோ.. இதெல்லாம் இஞ்ச சரிவராது இஞ்ச கத்தினால் யாரும் வரப்போறதில்ல'' என்றவன் கூறி முடிக்குமுன் "கத்தினா இது தான் நடக்கும்'' திரும்பிப் பார்க்கிறாள் தாட்சா மூவரிடத்தும் ஒரு கையில் துப்பாக்கியும், மறுகையில் கோரக்கத்தியும், நடுங்கிப்போனாள். "ஏன் இஞ்ச என்னக் கொண்டந்தனியள். நான் என்ன தப்புச் செய்தனான்.? நீங்கள் யார்?'' "நாங்கள் இலங்கையர்கள்'' "என்னை எங்க கொண்டு வந்து வச்சிருக்கிறியள்?'' ''இலங்கையில'' ''ஏன் இஞ்ச கொண்டந்தனியள்?'' "வாழவைக்க'' இதயத்தில் ஆழப் பதிந்திருந்த எண்ண அலைக் கோடு கிளித்துக்கொண்டு வெளிக் கிளம்பியது. காலமிது. என்று அவள் இதயத்துடிப்பு அதற்காய் சுருதி சேர்த்துக் கொண்டது. ''எங்கட அண்ணா உங்கள வரட்டாம். அவ ரோட நல்லபடி நடக்க வேணும்.'' என மருட்டினான். இன்னொருவன் தங்கள் தலைவரிடம் அனுப்பும்போது கறுப்புடை, மொட்டைத் தலை, அரிவாள் மீசை, சப்பை மூக்கு, காய் தாட்சா இஞ்ச ஆரைத் தேடிவந்தீங்க?' மௌனமானாள் தாட்சா. "இஞ்ச பயப்படத் தேவையில்லை. ஒருவரும் பிடிச்சு விழுங்க மாட்டாங்கள். நாங்களெல்லாம் எங்கட உறவுகள் தான் சரி'' "சொல்லி முடித்தான் தலைவன் "கம்பசில எந்த இயர்?' "பைனலியர்'' ஆ அப்ப கெட்டிக்காரி வடிவும்தானே எல்லாத் துக்கும்... நல்லம் என்ன லவ் பண்றீங்களா? 'ஓம்' தயங்கியபடி பதில் கொடுத்தாள தாட்சா. என்ன ஒரு சொல்லுக்கு மேல படிக்கலயா? நீங்க, இல்ல படிச்சனான் பயமாயிருக்கு'' ஏன் பயம்? தங்கச்சி நீங்க நல்லம். இஞ்ச பயப்படத் தேவை யில்லை. சரி உங்களுக்கு இஞ்ச இருக்க விருப்பமா? எனக்கு இஞ்ச இருக்க நிறைய விருப்பம். ஆனா பயமாக்கிடக்கு 'ஏன்?' ஒண்டு எனக்கு விலங்கு பூட்டியிருக்கிறியள் மற்றது ஆரும் வந்திட்டா. ஏக்கத் தொனியில் பதில் கொடுத்தாள. 'இஞ்ச கடவுள் கூட வு ரேலாது காற்றுக் கூட வர இடமில்லை. பிறகென்ன பயம்' என்றவன் விலங்கைக் கழற்றி விட்டான். அகலத் திரையில் அருவருக்கத்தக்க படம் அவன் அறையில் ஓடிக்கொண்டிருந்தது. நீங்கள் படம் பார்க்கிறதில்ல? இல்ல எனக்கு நிறைய விருப்பம் ஆனா சந்தர்ப்பம் கிடைக்கிறதில்லை. என்னை அப்ப, என்னை எப்ப காதலிப்பீங்க? 'நாளைக்கு' அப்ப நீங்க பக்கத்து றூமில போயிருங்க. பயப்படாதீங்க. அங்கே எல்லா வசதியும் இருக்கு. இஞ்ச இருந்தால் எயாக் கொண்டிசன் வாழ்க்கை தான். "எனக்கு கட்டுப்பாடு பிடிக்காது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழிறதிலதான் விருப்பம்'' என்றாள் தாட்சா. அதிர்ந்தே போனான், அவள் பதிலால் தலைவன். அவன் மனதில் நல்ல பிகர் நாளைக்குப் பார்ப்பமே என அவன் மனதும் ஆதங்கப்படவே செய்தது. "குட்நைட் அண்ணா'' "குட்நைட பாய்'' அறையில் சென்றவள் என்ன இது அநியாயம் இத்தனை வயர், கத்திகள் ஏன் கட்டிலுக்குக் கீழ் கிடக்கு எனக்கு நாலு கத்தி போதுமே. எடுத்துச் செருக்கிக்கொண்டாள் தாட்சா. அவள் மனம் இப்பொழுது சீதையாய் அல்ல இராவணன் சிறைப்பிடித்து ஏமாற்றுவதற்கு, அது கண்ணகியாய் மாறி கண்டிக்கத் துடிக்கிறது. தலைவன் அறைக்கான மணியை அழுத்தினாள். தலைவனைக் கண்டு நடுங்கியவள் இப்போது அதுவும் அத்த யாமத்தில் அவன் அறையை திறக்கத் துடிக்கின்றாளே ஏன்? எதற்காக?

*(யாவும் கற்பனை)*

**மன்னிக்கவும்**

சென்றவாரம் 27.09.2004 ஆம் திகதி நமது ஈழநாடு பத்திரிகையில் இதே பக்கத்தில் முருகு பாரிமகன் எழுதி வெளிவந்த 'அவள் காத்திருப்பாள்' சிறுகதை கணினியில் ஏற்பட்ட தவறு காரணமாக தொடர்பில்லாமல் கதை நகர்ந்திருக்கின்றது. தவறுக்கு வருந்துகிறோம் · என்று கூறிக்கொண்டு, ஒழுங்கமைக் கப்பட்டு மறுபடியும் இந்த சிறுகதை நமது ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும் என்பதை இலக்கிய வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

# சில பேர் இப்படித்தான்!

இரவு 8.30 மணியிருக்கும் வெள்ளவத்தையைச் சுற்றிக்கொண்டு கயெஸ் வான், இன்னும் ஒருவரை ஏற்றுவதற்காகப் பயணித்தது. அந்த இரவு வெளிச்சத்தில் வீதி ஒன்றுமே தெரியவிலலை. ஆனால், அந்த நபர் இருக்கும் இடமும் வந்தது. அவரையும் ஏற்றிக்கொண்டு எல்லாமாக 6 பேர்களுடன் கயெஸ்வான் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது.

எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். வானில் சினிமாப் புதுப்பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தது. காதில் கேட்கமுடியாத பாடல் வரிகள்.

வானில் உள் இருந்த பெரியவர் - தம்பி பழைய பாடல்களைப் போடு. இந்தப் பாடல்கள் கேட்க முடியாத அசிங்கவரிகளாக இருக்கின்றன. வானில் இருந்த பெண் ஒருத்தி, பழைய பாடல்களைக் கேட்க முடியாது என்று சொலல... பெரியவருக்கும், அந்த இளம் பெண்ணுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுக்கொண்டிருக்க...

வான் றைவர் சிங்களப் பாடல் கசெற்றைப் போட்டுவிட்டார். வாக்குவாதம் பிடித்த இரண்டு பேரும் அமைதியாக இருக்க, இன்னொரு பெரியவர், பழையதோ, புதியதோ தமிழ்ப்பாடல் கசெற்றைப போடு தம்பி என்றார். அவனோ புலிகளின் பாடல் கசெற்றைப் போட்டுவிட்டான்.

புலிப்பாடல் இப்பொழுது தேவைதானா. இராணுவப் பகுதிக்குள் புலிகளின் பாடல் கசெற்றைப் போட்டால் என்ன ஆகுமோ என்றார் பெரியவர். சமாதான காலம் ஒன்றுமே ஆகாது என்றார் றைவர்.

மெதுவாகத்தான் வான் நகர்ந்து கொண்டிருந்தது. புலிப்பாடல் வரிகள் மனதில் புதுத்தெம்பு ஊட்டிவிட, வானின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டு சென்றது.

புலிப்பாடல் வரிகள் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்து, அமைதியாக இருந்து கேட்க வைத்தது. ஆனாலும் பாடல்களைக் கேட்க முடியாத அந்தப் பெரியவர்... இவங்களாலைதான் நாங்கள் கஷ்ரப்படுகின்றோம். விடுதலைப் போராட்டம் என்று சொல்லிப் போராட வெளிக்கிட்டவை. இராணுவம் கண் முன் பாராமல் அடிக்க வெளிக்கிட்டவன். அன்றில் இருந்து இன்று வரை எங்களுக்கு இழப்புத்தான்.

யாழ்ப்பாணத்தில் இருக்க முடியாமல் கொழும்பில் போய் குடியேறினேன். இன்று சமாதான காலம்



எத்தனை நாளைக்குத்தான் சமாதானம் தொடருமோ தெரியாது. புலிகள் குழப்பி விடுவார்கள் என்றார். அந்தப் பெரியவரிடம் யாரும் பேசாமல் அமைதியாக இருந்தாரகள்.

மேலும் மேலும் புலிகளைப் பற்றிக் குறைவாகச் சொல்லிக் கொண்டுவந்தார். வான் றைவரோ அந்தப் பெரியவர் சொல்லும் சொல்லுக்குத் தலையாட்டிக் கொண்டு, ஓம்... ஐயா இதையெல்லாம் யார் கேட்பார்கள். வரி என்று சொல்லீ ஒவ்வொரு தடவையும், பயணிகளை ஏற்றிக் கொண்டுபோகும் போது பணம் பறித்து விடுவார்கள் என்றார்.

இருவரும் மாறி மாறி புலிகள் மீதே பிழையைக் கூறிக்கொண்டுவர வானில் இருந்தவர்கள் அமைதியாக இருந்தனர்.

ஓமந்தையைத் தாண்டி புலிகளின் பகுதிக்குள் செல்வதற்கு அனுமதி பெறுவதற்காக நான்காவது வரிசையில் வாகனங்கள் நின்றது. வாகன வரிசையில் எட்டாவதாக எமது வான் நின்றது. அந்தப் பெரியவரும் ஓய்ந்தபாடில்லை. இனி இவங்களிட்டை பாஸ் எடுக்கவேண்டும். நேரம் போகப்போகுது. அவங்கள் வேளைக்கு விட்டிட்டாங்கள், இவங்கள் எப்பத்தான் விடப் போறாங்கள். இப்படியாக மக்களைக் கஷ்ரப்படுத்துகின்றார்கள் என்று சொல்லி விட்டு அமைதியாக இருந்தார் பெரியவர்.

தூரத்தில் நின்ற ஒரு போராளி எங்களுடைய வாகனத்தை நோக்கி நடந்து வந்தான். இவன் எதற்காக எங்களுடைய வானைப் பார்த்தவாறு அருகில் வருகின்றான் என்று அந்தப் போராளியை எல்லோரும் பார்த்தார்கள். அந்தப் போராளி அருகில் வந்ததும் ஐயா என்ன இங்கே இருக்கிறியள். எப்ப வந்தனியள் என்றதும் எதுவித தயக்கமும் இன்றி நெடுநாள் பழகிய உறவுபோல் புன்னகைத்துக் கொண்டு, இப்பத்தான் வாரேன் என்று சொல்லிக் கொண்டு வானை விட்டு இறங்கி, அந்தப் போராளி கூட கதைத்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பெரியவர் வந்திருப்பதை அறிந்த சக போராளிகளும் அந்த இடத்திற்கு வந்து, பெரியவருக்கு கை குலுக்கிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். வானில் இருந்தவர்கள் எல்லோரும் அதிசயமாகப் பார்க்க, வானின் றைவர் மட்டும் நாடியில் கைவைத்துக் கொண்டு பார்த்துக்கொண்டிருந்தார்...

போராளிகளுடன் கதைத்து முடிந்ததும் அந்தப் பெரியவர் வானில் வந்து ஏறி மௌனமாக இருந்தார். அனுமதி கிடைத்ததும் வான் யாழ்ப்பாணம் நோக்கி விரைந்தது.

வானில் இருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விளங்கிக் கொண்டார்கள்.

-செல்வா.

# பாடை கட்ட

ஆற்று நீரது
தன் வளி ஓட
ஆண்ட வெளியே
வெண் முகில் ஓட
தமிழர் படை
தன் நிலம் மீட்க ஓட
தடுமாறி எதிரிபடை
திசை மாறி ஓட
பலம் வேண்டுமென
சிங்க தளபதிகள் பாட
பல நாடு தேடி
கதிர்காமர் ஓட
வேண்டியனை கொண்டு வந்து
வன்னியிலே கொட்ட
வெற்றி நம தென்று
சிங்களம் கை தட்ட
வேங்கைப் படை சென்று
முகாம் கதவிலே தட்ட
விட்டு விட்டு ஓடினர்
முதுகில் கால் முட்ட
எனும் நீ வருவாயா
எம்முடன் முட்ட
இங்கே காத்திருக்கிறோம்
உனக்கு குழி வெட்ட
என்னும் எத்தனை நாளாகும்
எஞ்சியவர் மூட்டை கட்ட
கஷ்டம் என்றால் சொல்லி விடு
வருகிறோம் உமக்கு பாடை கட்ட

# சமுதாயத்தின் குறிக்கோளுக்கமையவே இலக்கியம் வரையறுக்கப்பட்டது

இலக்கியம் என்றால் என்ன? என்பதற்கு பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. இலக்கியம் ஒவ்வொருவர் பார்வையின் அடிப்படையில் வேறுபடுகின்ற இயல்பையுடைய காரணத்தாலேயே இவ்வாறு அதன் கருத்துக்கள் பலவாகக் காணப்படுகின்றன.

இலக்கியப் பார்வையின் வேறுபாடுகளுக்கு இலக்கியத்தை நோக்குகின்றவர் மனநிலை, அவர் வாழ்கின்ற சூழ்நிலை, நோக்குவோர் கொண்ட கொள்கைகள் போன்றன காரணமாகின்றன.

இலக்கியம் என்பது இலட்சியம் என்ற வடமொழிச் சொல்லில் இருந்து பிறந்ததாகக் கூறப்படுகின்றது. இலட்சியம் என்ற சொல்லுக்குரிய கருத்து "குறிக்கோள்" என்பதாகும். இலக்கியம் மூலமாகக் குறிக்கோளை அடைதல் என்ற பொருளில் இந்தக் கருத்து இலக்கியத்துக்கு அமைந்திருக்கின்றது.

ஆன்மா ஒன்றின் குறிக்கோள் என்பது வீடுபேறு என்பதாகவே அமைந்திருந்தது. முத்திப்பேற்றை அடையும் நோக்கிலான கருத்துக்களும், ஆன்மீக சிந்தனைகளும் நிறைந்திருந்த சமுதாயத்தில் இத்தகைய கருத்துக்கள் மூலமே இலக்கியம் வரையறுக்கப்பட்டது.

அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நான்கு புருடார்த்தங்களையும் கூறுவனவாகவே இலக்கியங்கள் இருக்க வேண்டும் என்கின்ற கருத்துக்களும் காணப்பட்டன. வாழ்க்கையில் அறச் சிந்தனைகளோடு வாழவேண்டும். இல்வாழ்க்கையில் இணைந்து, இனிய மனையாளுடன் நடத்தும் அழகிய வாழ்க்கையில் அன்புடைமை நிகழ வேண்டும். இனிய புத்திரர்களைப் பெற்று மறுமையில் இன்பம் பெற வழிவகை செய்ய வேண்டும்.

இனிய சொற்களைப் பேசுதலும், விருந்தினரை உபசரித்தலும், நடுவு நிலைமையான ஒழுக்கங்களும் ஒரு மனிதனுக்கு இன்றியமையாத பண்புகளாகும்.

அறவழியில் ஈட்டப்படுகின்ற பொருட்களே நல்வாழ்வுக்கு வழிவகை செய்வனவாகும். எந்த நிலையிலும் அறவழி தவறி ஈட்டப்படுகின்ற பொருட்களால் வாழ்க்கையில் நிம்மதி ஏற்பட்டுவிடாது. நிலையில்லாத செல்வம் என்று குறிக்கப்படுகின்ற செல்வத்தை ஒருவன் பெறுகின்றபோது அவற்றை நிலையான செயல்களைச் செய்வதற்காக செலவழித்துக் கொள்ள வேண்டும்.

அறவழியில் ஈட்டப்படுகின்ற பொருள், அவற்றை அறவழியில் செலவு செய்ய வேண்டிய



அவசியம் இவற்றின் மூலமாகவே ஒருவன் இன்பத்தை அடைய முடியும். என்கின்ற கருத்துக்களே இலக்கியங்களுக்கு கொடுக்கப்படுகின்ற வரையறையாகும்.

இன்பம் பற்றிய கருத்துக்களில் உலகியல் இன்பம், பேரின்பம் என்கின்ற இருவகை இன்பங்கள் கூறப்படுகின்றன. இந்த உலகில் ஒருவர் பெற்றுக்கொள்கின்ற இன்பமே உலகியல் இன்பமாகும். அதாவது - ஒரு மானிடப் பிறவி உயிர் எடுத்ததில் இருந்து, அது இறக்கும் வரையும் அடைகின்ற இன்பங்களை உலகியல் இன்பங்களாகக் குறிப்பிடப்படுகின்றது.

உடலை விட்டு உயிர் சென்றதன் பின்னர் ஒரு உயிர் அடைகின்ற இன்பங்கள், முத்திப்பேறு, வீடுபேறு எனப் பேரின்பம் குறிக்கப்படுகின்றது. உலகியல் இன்பங்கள் ஓரளவு வரையறுத்துக் கூறினாலும் ஆன்மீக - பேரின்பங்களை வரையறுத்துக் கூறுவதில் சமயங்கள் - மதங்களின் தோற்றம் முக்கியமாகின்றது.

இத்தகைய இன்பங்களைக் கூறுகின்ற சந்தர்ப்பங்களிலேயே பல்வேறு மதம் சார்ந்த இலக்கியங்களும் தோற்றம் பெறுகின்றன. இந்து மதத்தின் உண்மைகளைக் கூறுவதற்கு வேதங்கள், உபநிடதங்கள் எனப் பல்வேறு இலக்கியங்கள் தோன்றியதோடு இன்னமும் தோன்றிய வண்ணம் உள்ளன.

பௌத்த சமயத்தின் மகாவம்சம், இஸ்லாம் சமயத்தின் பைபிள் என இந்த இலக்கியங்கள் வேறுபடுகின்றன. அதேபோல்தான் பொருள்தேடும் உலகுக்கு வழிகாட்டும் தொழில்சார் நூல்களும் பல தோற்றம் பெற்றிருக்கின்றன.

அறம் கூறும் நூல்களும் பல்வேறு வகையில் காணப்படுகின்றன. அறம், பொருள், இன்பங்களை அடிப்படையாக்கிக் கொண்ட நூல்களே இலக்கியங்கள் என்ற வகைகளில் வரையறை செய்யப்பட்டு. இலக்கியத்தின் தோற்றுவாய்க்கு அடிப்படையாயின.

மனித வாழ்வின் தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தோன்றிய கொள்கைகளும், கோட்பாடுகளும் பற்றியதான இலக்கியங்கள் எந்த மொழியைச் சேர்ந்ததாக இருந்தாலும், அவை மனித வாழ்வின் குறிக்கோளை எட்டுவனவாகவே அமைந்திருக்கின்றன. அமைய வேண்டும் என்பதையே நோக்காகக் கொண்டுள்ளன.

-பூ.நகுலன்.

# நாட்டார் இலக்கியத்தில் நகைச்சுவை



சிரிப்பு மனித குலத்துக்கே சொந்தமானது. சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்கே சொந்தமான கையிருப்பு என்றார் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்.

மட்டுநகர் மீன்பாடும் நாடு மட்டுமல்ல, தெம்மாங்கு (தென்+பாங்கு) ப் பாடல்களுக்கும் பெயர் பெற்றது. காதலன் ஒருவன் தன் காதலியைச் சந்திக்க ஆவல்கொண்டு அவளிருக்கும் ஒழுங்கை வழியாகப் போகிறான். அவளும், அவனைக் கவனித்துவிட்டாள்.

அந்திவிடிந்து சந்தையால போற மச்சான்.

நேரத்துக் கொருடுப்பு நெய்யிற தோவாங்கிறதோ

என்று சாடையாக பாடுகிறான்.

அவனும் - மாசம் பதினாறு வளவு நிறைஞ்ச நிலா

சித்தொழுங்கைக்குள்ளால ரெண்டு செருப்புழுது

போடுதுகா.....அவனுடைய வாய்ப்பாட்டு அவளை வருத்தியது. சந்தன மரத்தை சந்திக்க வேணுமெண்டா

பூவலடிக்கு பொழுது படவா மயிலார் - என்றாள்.

அவனுடைய மனம் மகிழ்ந்தது என்று சொல்லவும் வேண்டுமோ - அவனும பொழுது படப் பூவலடிக்குப் போனான். ஆனால், அவள் வரவில்லையே. மறுநாள்...

தாயாரும் இல்ல மச்சான் -
தகப்பன் வெடிகாட்ட
அண்ணன் தினைக்காவல் - என
ஆணி முத்தே என்னசெய்ய
அவனுடைய வெப்பியாரம்.
இப்படி வருகிறது.
கடித்த நுளம்பும் தான்
காத்திருந்த மூலையும்
அடித்த மழையும் - எனக்கொரு
ஆள்வேணும் சொல்லியழ
என்று பாடினார்...

- தமிழ்க்கவி.

# தொலைத்து விட்டார்

பாலை மரமே யாரை தேடுகிறாய்
உன் நிழலில் வாழ்ந்த வரையா
ஊரது வாசல் திறந்தது
உன்வேரடி மனிதர் போய்விட்டார்
ஊரோடு வாழப்போனார்
உறவுகளோடு சேரப்போனார்
கரிகிய வாழ்வு துளிர்க்கும் எண்டு
கனவுகளை சுமந்துபோனார்– ஆனால்
அவர்கள் விட்டு வந்த ஊர்
அங்கு இல்லை
அது செத்துப் போய்விட்டது
பச்சை பேய்கள் அங்கு சுற்றி நிற்கிறது
அவர்கள் பார்வையில்
கோரம் சிரிக்கிறது.
எல்லாமே கிடைக்குமென போனார்
இங்கிருந்து கொண்டு போனதை
தொலைத்துவிட்டார்
என்னத்தை தொலைத்துவிட்டாரோ?
அதுதான் நிம்மதி உறக்கம்.

பொன்னாலை - கண்ணதாசன்

# அறிவுப் புலம் அறிக!

ஆர்க்கும் அறிவிக்கமுடியா
ஆதங்கம்
தூர்ந்து மணித்துளிகள்
தொலையும் துயரம்
பார்க்கிறேன் படித்த பட்டதாரிகளை
வேர்த்து வெறும்
மனதாய் வேதனையில்...
மார்க்கம் வேறின்றி
மத்தியில் படிக்கிறார்
போர்க்காலம் போய்
பொங்கு தமிழ்க்காலமதில்
ஊர்குடிக்கும் உத்தமர்கள்
உழைப்பிற்காய் பேரிட்டார்
பயிற்சி என்றோர்
போலி வார்த்தைகளால்
வசைபாடி வருந்துகிறோம்.
சீர்த்தொம்மை ஆட்கொண்ட
எந்தைப் பெருமானே!

- பிரம்மா.

# விழித்திருப்பு

வாழ்க்கை மேடையில்
முடிவின் இறுதிக் காலங்களில்
நிம்மதியின் பெரு மூச்சுக்கள் இப்போ
நடைப்பிணமாய்ப்போன என் வாழ்வும்,
நரபலியின் வடுக்களில்
கொட்டிய குருதியும் சாட்சியம்
மரத்துப்போன மனிதமில்லா
மனிதம் முன்
விடியும் காலைப்புலர்வும்
வெறுமைபடர்ந்து மறையும் நாட்களும்
கண்களுக்கு தெரியும் காட்சிகளில் -
மனிதப் புன்னகைகளில்
ஐந்தறிவின் குணாம்சத்தின் வியாபிப்பு
வெறுமை படர்ந்த - என் பயணம்
சமாதானக் காற்றின்
சுகந்தத்தில் தும்பப்படும்
சன்னங்களில் சங்கமிக்கும்
மனித உயிர்கள்
களைப்பாலும்
சூரியத் தேவனின் பிள்ளைகள்
விழித்திருப்புக்களின் ஊடே
பொங்கும் தமிழ் உணர்வு
எங்கும் இனி காத்திருக்கும்.

- பவித்ரா.

# பின்தங்கிய பாடசாலையாக பிரகடனப்படுத்த பூநகரி விக்னேஸ்வரா ஆசிரியர்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலயம் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற இந்தப் பாடசாலையை பின் தங்கிய பாடசால்லயாக பிரகடனப்படுத்தப்படவில்லை.

இதனால் இந்தப் பாடசாலை ஆசிரியர்களுக்கான அதிகஷ்ட பிரதேசப்படிகள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக இந்தப் பாடசாலை ஆசிரியர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

இந்த மகஜரில் -

பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலயம் மிகவும் பின்தங்கிய பிரதேசத்திலுள்ளது. இதில் பணிபுரியும் ஆசிரியர்களாகிய நாம் யாழ்ப்பாணத்தில் இருந்தும், பூநகரிப் பகுதியில் இருந்தும் செல்கின்றோம். ஆனால் எமக்கு அவ்விடத்தில் தங்கி நிற்கவோ, போக்குவரத்துச் செய்யவோ வசதி இல்லை. அத்துடன், பாடசாலையில் நிரந்தரக் கட்டடமோ, வகுப்பறைகளோ ஏதும் இல்லாதுள்ளபோதும் நாங்கள் தினமும் இரண்டு மணித்தியாலயத்துக்கு மேல், காலை பிரயாணம் செய்து பாடசாலை சென்று அங்கு எமது கடமை முடிந்ததும் வீடு செல்ல மாலை ஐந்து மணிக்கு மேல் ஆகிவிடும். இவ்வாறு கஷ்டப்பட்டு பணியில் ஈடுபட்டு இருக் கும் போது, எமக்கு வழங்க வேண்டிய அதிகஸ்டப் பிரதேசப் படி வழங்கப்படவில்லை.

ஆனால், எமது பாடசாலையைச் சூழவுள்ள பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கஷடப்படி வழங்கபபட்டு வருகின்றது. அதாவது, எம்முடன் நியமனம் பெற்றவர்கள் எம்மைவிட வசதியான பாடசாலையில் இருந்தும், இந்தப் படியைப்பெறும் போது, நாம் அவர்களைவிட மிகவும் கஷ்டப் பிரதேசத்தில் வேலை செய்தும், எமக்கு இந் தப்படி வழங்கப்படாததையிட்டு நாம் அனைவரும் கவலையும், மனச்சோர்வும் அடைந்துள்ளோம். எமது அயல் பாடசாலையான கிளிநொச்சி பூநகரி மகாவித்தியாலயம், கிளிநொச்சி நல்லூர் மகாவித்தியாலயம், கிளிநொச்சி கறுக்காய்தீவு மகாவித்தியாலயத்தில கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும் பாலானோர் அதே கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் நாம் அனை வரும் பிரயாணம் செய்து கற்பிப்பவர்கள் என்பதை தங்களுக்கு தெரியப்படுத்துகிறோம். இந்த விடயம் சம்பந்தமாக நாங்கள் அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தெரிவித்த போது அவர் கூறிய காரணம் எமது பாடசாலை அடையாள இலக்கம் கிடைக்கவில்லை.

அதனால் அதிகஷ்டப் பிரதேசப் படி வழங்க முடியாது என்றார். அதனால் எமது பிரச்சினையை தங்கள் முன்கொண்டுவருகின்றோம்.

எனவே தங்களிடம் தாழ்மையாக வேண்டிக் கொள்வது என்ன வென்றால், எமக்கு அதிகஷ்டப் பிரதேசப் படி வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். இல்லையேல் அயலிலுள்ள கஷ்டப்பிரதேசப் பாடசாலைக்கு எம்மை இடம் மாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவர்களின் மகஜரில் குறிப்பிட்டிருந்தது.

## தையல் இயந்திரம் அன்பளிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சியில் உள்ள ஐ.எம்.ஒ நிறுவனம் இருவருக்குத் தையல் இயந்திரங்களை அன்பளிபபாக வழங்கியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வியலை மீளக் கட்டியெழுப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் கீழ், எஸ். நாகேஸ்வரி, கலைமகள் ஆகிய இருவருக்கும் இந்தத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (இ)

## வீடு எரிந்து நாசம்

(விசுவமடு)

புன்னை நீராவியிலுள்ள நாதன் திட்டத்தில் வீடு ஒன்று தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமானது.

வீட்டில் யாரும் இல்லாத வேளையில் வீடு முற்றாக எரிந்துள்ளது. வீட்டில் இருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் யாவும் எரிந்து நாசமாகியுள்ளன. ஐயம்பிள்ளை என்பவரின் வீடே தீப்பிடித்தது. (இ)




## அடிப்படை வசதியின்றி இயங்கும் கண்ணகைபுரம் பாடசாலை

(கிளிநொச்சி)

கண்ணகைபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை நீண்டகாலமாக அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலை தற்காலிகமாக அமைக்கப்பட்ட இரண்டு கொட்டில்களில் இயங்கி வருகிறது. இந்தக் கொட்டில்களின் கூரைகள் மிகமோசமான நிலையில் பழுதடைந்துள்ளன. தற்போது பெய்துவரும் பருவ மழையால் கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள் மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்துப் பாடசாலையில் 135 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இங்கு அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் மாணவர்கள் பெரும்சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கேட்டுள்ளனர்.

## குன்றும் குழியுமாக காணப்படும் முல்லைத்தீவு-துணுக்காய் வீதி

முல்லைத்தீவு - துணுக்காய் வீதி மோசமாக சிதைவடைந்து குன்றும் குழியுமாக காட்சியளிக்கிறது.

வவுனியா - பூவரசன்குளம் சந்தி யில் இருந்து இரணைஇலுப்பைக் குளம், விளாத்திக்குளம், பரந்தன் குளம், மூன்றுமுறிப்பு, 'பனங்கா மம், நெட்டாங்கண்டல், துணுக் காய் வரை செல்லும் 27 மைல் தூரமான வீதி கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் புனரமைக் கப்படாத நிலையில், மக்கள் பய ணிக்க முடியாதவாறு படு மோச மாக சேதமுற்று காணப்படு கிறது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்தொழில் பயிற்சி கல்லூரி

முல்லைத்தீவு மாவட்டக் கடற்தொழிலாளர்களின் நன்மைகருதி கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கடற்புலிகளின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

இந்தப் பிரதேசக் கடற்தொழிலாளர்கள் நவீன முறைகளைப் பயன்படுத்தி உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளும் வகையில், அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கும் பொருட்டே இந்தப் பயிற்சிக் கல்லூரி விரைவில் அமைக்கப்படவுள்ளதாகக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

இந்துப்பயிற்சிக் கல்லூரியை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஈடுபட்டு வருகின்றது. (122)

## மாலதியின் நினைவுநாளை முன்னிட்டு முல்லைத்தீவில் பெண்கள் சங்கம நிகழ்வு

(முல்லைத்தீவு)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும், முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்.மாலதியின் நினைவுநாளையும் முன்னிட்டு முல்லைத்தீவில் பெண்கள் சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேதினி தலைமையில் இடம் பெற்றது.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். 2 ஆம் லெப். மாலதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச் சுடரை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றினார். மாலதியின் திருவுருவப்படத்துக்கான மலர்மாலையை அலம்பில் பங்குத் தந்தை யூட் அமலதாஸ் அணிவித்தார். மலர் அஞ்சலியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், மூத்தபெண் எழுத்தாளர் அதிலட்சுமி சிவகுமார், பங்குத் தந்தை யூட் அமலதாஸ், முல்லைத்தீவு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயகுலராஜா, தமிழ ஆசிரியர் சங்கச செயலாளர் மகாசிவம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு 22 முன்பள்ளிகளுக்கான விளையாட்டு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தினரால் வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள 22 முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வுகள் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை 3 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்ட இணைப்பாளர் ரஞ்சினி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட நியாப் திட்ட உத்தியோகத்தர் கோபி, மாவடி வலய மனிதவள உத்தியோகத்தர் த.லோகேஸ்வரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை அரசியற்துறையைச் சேர்ந்த இராமஜெயம் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் இராஜன் ஏற்றிவைத்தார். கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழகக் கொடியை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் வே.பிரபாகரன் ஏற்றினார். முன்பள்ளிக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக் கழக் இணைப்பாளர் கௌசல்யா ஏற்றினார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழக செயலாளர் மு.குமாரசாமி நிகழ்த்தினார். ஆசியுரையை இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் அகிலேஸ்வரன் ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து வட்டக்கச்சிப் பிரதேச முன்பள்ளி மாணவர்களின் இசைவும், அசைவும் நிகழ்ச்சியுடன், விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இறுதியாக வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது. (9)

## கடற்புலி மாவீரர்களின் நினைவாக முல்லைத்தீவில் ஒலிப்பேழை வெளியீடு

1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி வீரச்சாவைக் தழுவிக் கொண்ட கடற்புலிகளின் துணைத் தளபதி லெப்டினன்ட் கேணல் நிறோஜனின் 5 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு - முல்லைத்தீவு நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேலும் சர்வதேச கடற்பரப்பில் 2003 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த கடற்புலி மாவீரர்களின் நினைவு ஒலிப்பேழையும், இந்த லெப்டினன்ட் கேணல் நிறோஜனின் நினைவு நாள் நிகழ்வில் வெளியிடப்படவுள்ளது.

## முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலையை தரமுயர்த்துவதற்கு 100 மில்லியன் ரூபா நிதியுதவி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 100 மில்லியன் ரூபா செலவில் மகாவித்தியாலய தரத்தில் உள்ள பாடசாலையொன்று புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை நிகொட் நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

இந்த திட்டத்துக்கு பொருத்தமான பாடசாலை ஒன்றைத் தெரிவு செய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் கல்விப்பணிப்பாளரை கேட்டுள்ளார்.

வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், கல்விக் கழகத்தினர் ஒன்று சேர்ந்து இந்த பாடசாலையைத் தெரிவு செய்யவுள்ளனர்.(122)

## நிதி ஒதுக்கீடு

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் கிராமத்தில மக்கள் மீளக்குடியமர்ந்து வருகிறார்கள். இதன் காரணமாக அடிப்படை வசதிகளான மலசலகூடம் அமைத்தல், புதிய நீர்த்தாங்கிகள் அமைத்தல் மற்றும் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு நிகொட் நிறுவனம் நிதி ஒதுக்கியுள்ளது.

திருக்கேதீஸ்வரத்துக்கு செல்லும் போக்குவரத்து வசதிகளும் சீர்செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201)

## பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் இரண்டு மாடிகட்டடம் திறந்துவைப்பு

பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தின் இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய வகுப்பறைக் கட்டத்தொகுதி நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆய்வுகூட கட்டடத்தை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் திறந்து வைத்தார். ஏனைய வகுப்பறை கட்டடத் தொகுதிகளை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, ஏ.எஸ்.ரி. நிறுவன திட்ட இணைப்பாளர் ஆகியோர் திறந்துவைத்தனர்.

## தலைமன்னார் வந்தடைந்த மேலும் ஏழு தமிழ் அகதிகள்

தமிழகம் மதுரை மாவட்டம் திருவாதவூர் அகதிமுகாமில் இருந்து தமிழ் அகதிகள் 7 பேர் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

தலைமன்னார் கடற்கரைக்கு வந்து சேர்ந்த இவர்களை பொலிஸார் பொறுப்பேற்று கிராம அலுவலர் ஊடாக பதிவுகளை மேற்கொண்டு அவர்களின் சொந்த இடங்களான திருகோணமலை, அன்புவழிபுரம், வவுனியா ஆகிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (201)

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பார் சொல்இழுக்குப் பட்டு

திருக்குறள்

# நமது நோக்கு

## யாகாவாராயினும் நாகாக்க...!

கடைசியில் ஜனாதிபதி சந்திரிகா இன்றைய சமாதான முயற்சிகளுக்கு இடையூறாகத் தொடர்ந்து அர்த்தமற்ற 'அலம்பல்' கருத்துக்களை முன்வைத்து, அதன்மூலம் தமது குறுகிய இனவாத நோக்கிலான அரசியல் இலாபங்களை எட்டுவதற்கு அவரைச் சுற்றியிருந்துகொண்டே கடும் முயற்சிகளை எடுத்து வரும் சக்திகளை இனங்கண்டு கொண்டுவிட்டார் போலிருக்கிறது.

அல்லது, ஏற்கனவே இப்படிப்பட்ட கும்பலைச் சேர்ந்தவர்கள்தான் இவர்கள் என தன்னால் ஏற்கனவே உணரப்பட்டு வந்தவர்களின் அத்துமீறல் அறிவிப்புக்கள் - அறிக்கைகள் தொடர்பாக இப்போதுதான் அவர்கள் மீது எரிச்சலும் அருவருப்பும் கொண்டிருக்கிறார்போலும்...

எப்படியோ அவரின் வாயிலிருந்து இப்படியான வார்த்தைகள் வெளிவந்தது சந்தோசமே...

அதாவது, இலங்கையில் பல தசாப்பதங்களாக இருந்து வரும் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் ரீதியில் தீர்வொன்றைக் காண்பதற்கு முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாக, அரசின் பங்காளிக் கட்சிகள் எந்தவிதமான சுயாதீனமான கருத்துக்களையும் கூறக்கூடாது என அவர் இவ்வளவு காலத்தின் பின்னர் இப்போது அறிவித்துள்ளார்.

தனது பங்காளிக் கட்சிகள் - சமாதான முயற்சிகள் தொடர்பாக நாளுக்கு ஒரு கருத்தைக் கூறியும், பொழுதொரு அறிக்கையை விடுத்தும் வருவதானது சமாதான முன்னெடுப்புக்களுக்கு குந்தகம் விளைவிக்கும் செயல் எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி - சமாதான முயற்சிகளுக்கு அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சியினரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ள அவர், அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தரப்பினரும் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து வாய்க்கு வந்தபடி கருத்துக்களைப் பொழிந்து தள்ளுவதை உடனடியாக நிறுத்த வேண்டியது அவசியம் எனச் சற்றுக் காட்டமான தொனியிலேயே பேசியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவுறுத்தல் உரையானது இரண்டொரு முக்கிய விடயங்களைத் தெளிவுபடுத்துவதாகவே உள்ளது எனலாம்.

முதலாவது - சமாதான முயற்சிகள் தொடர்பாக தனது கூட்டணியைச் சேர்ந்தவர்கள் கற்றுக்குட்டித்தரமான கருத்துக்களை வாய்க்கு வந்தபடி சொல்லிவருகிறார்கள் என்பதை இதன்மூலம் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக் கூட்டணி உருவாவதற்கு முன்னரேயே சமாதான முயற்சிகளையும் அதற்கான நோர்வேயின் அநுசரணையையும் வெளிப்படையாக எதிர்த்த கட்சிகளில் மிகவும் முக்கியமானவைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி மற்றும் தினேஷ்குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவையேயாகும். அப்போது இந்தக் கட்சிகளுக்குத் தலைமைதாங்கும் சமாதான எதிர்ப்புத் தலைவியாக பின்னணியில் இயங்கியவர் இதே ஜனாதிபதிதான்.

சமாதான நடவடிக்கைகளில் அப்போது ஈடுபட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு இராஜதந்திர ரீதியில் கடுமையாக முயற்சி செய்த ஜனாதிபதிக்குப் பக்கபலமாக நின்றவை, மேற்குறித்த ஜே.வி.பியும், மக்கள் ஐக்கிய முன்னணியும்தான்.

ரணிலைப் பதவியிலிருந்து அகற்றவும், சமாதான முயற்சிகளைக் குழப்பவும்தான், இவர்கள் அரசியலில் கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியையும் அப்போது மேற்கொண்டனர்.

ஜே.வி.பி. சுதந்திரக் கட்சிக் கூட்டணி உடன்பாடானது ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்து சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற மறைமுக ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே ஏற்பட்டது.

எனவே, தனது பங்காளிக் கட்சிகள் சமாதான முயற்சிகளில் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்பது ஜனாதிபதிக்குத் தெரியாததல்ல...

புதிய அரசு அமைத்ததும், சமாதானம் தொடர்பாக ஜனாதிபதிக்கோ அவரது பங்காளிக் கட்சியினருக்கோ எவ்விதமான சாதகமான கருத்து நிலைப்பாடும் இருந்ததில்லை.

ஆனால், இப்போது சமாதானத்தைத் தொடராமல், ஆட்சியையும் விஸ்திரமான முறையில் தொடரமுடியாமல் ஜனாதிபதி திக்குமுக்காடும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால், அவரது பங்காளிகளின் அரசியல் - சமாதான எதிர்ப்பை மையமாகக் கொண்டிருப்பதால் அவர்கள் ஜனாதிபதியின் அரசியல் இலாப நோக்கிலான சமாதான நகர்வுகளுக்கு ஒத்துழைப்பை வழங்கும் நிலையில் இல்லை. இதுவே இன்றுள்ள சிக்கல் நிலையாகும்.

இன்றைய நிலையில் பங்காளிகளை அடக்கவோ, மிரட்டவோ துணிச்சலற்ற ஜனாதிபதிக்கு வேறு வழியின்றி 'வார்த்தைகளை அளந்து பேசுங்கள்' என்று கூறவேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதால், 'வாய்க்கு வந்தபடி பேசவேண்டாம்' என்று கூறிவிட்டார்.

வாய்க்கு வந்தபடி பேசும் தனது பங்காளிகளால், சமாதான நகர்வுகளுக்கு மட்டுமல்ல, தனது எதிர்கால அரசியல் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி அனைத்துக்கும் தீர்வு காண்பது கடினம் என்பதை ஜனாதிபதி இப்போது தெரிந்துகொண்டுவிட்டார்.

கழுதையை உள் வீட்டுக்குள் கொண்டு வந்துவிட்டால் அதன் கத்தலைச் சகித்துக்கொள்ளத்தான் வேண்டும்... ஆனால், எத்தனை நாட்களுக்குத்தான் அதனைச் சகித்துக் கொண்டு மௌனமாக இருக்கமுடியுமாம்...?

அந்த நிலைதான் ஜனாதிபதிக்கும் ஏற்பட்டுள்ளதெனலாம். 'வாயைப் பொத்திக்கொண்டிருங்கள்' - எனத் தன் பங்காளிகளுக்கு அவர் அறிவுறுத்துகிறாரா? அல்லது கட்டளையிட்டிருக்கிறாரா? எதுவானாலும் ஜனாதிபதி தனது பங்காளிகளின் தன்னிச்சையான பேச்சுக்களால் சலிப்பும் - வெறுப்பும் அடைந்துவிட்டார் என்றால் அது மிகையில்லை.

## நாடும் நடப்பும்




வடமராட்சி கிழக்கில்

# அஞ்சல் அலுவலகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துககான அஞ்சல் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் 7 உபஅஞ்சல் அலுவலகங்கள் மாத்திரமே இயங்கிவருகின்றன. பளை அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் செம்பியன்பற்று, தாளையடி, ஆழியவளை, முள்ளியான் சுண்டிக்குளம், ஆகிய உப அஞ்சல், அலுவலகங்களும், பருத்தித்துறை அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் நாகர்கோவில், குடத்தனை ஆகிய உப அஞ்சல் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

எமது வடமராட்சிக் கிழக்குப் பகுதி யாழ்.மாவட்டத்தின் ஒரு பகுதியாகி இயங்கிவருகின்றபோதும், அஞ்சல் அலுவலகம் மூலம் கிடைக்கும் வசதிகளைப் போன்று, உப அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாலானவை மூலம் இந்தப்பிரதேச மக்கள் பயன் பெறமுடியாதுள்ளனர்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இந்தக்கோரிக்கை முனவைக்கப்பட்டு வந்தபோதும் இதுவரை எவ்வித விமோசனமும் கிடைக்கவில்லை எனவும், எனவே வடமராட்சி கிழக்கு மக்களின் நலன்கருதி இந்தப் பகுதிக்கென தபால்நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (122)

## இருபது லட்சம் ரூபா செலவில் தாளையடியில் குளிரூட்டி அறை

(வடமராட்சி)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.இசற்) நிதியுதவியுடன், தாளையடியில் குளிரூட்டி அறை ஒன்றை அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

தாளையடி பிரதான வீதியில் அமைந்துள்ள வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்குச் சொந்தமான காணியில் கட்டடம் அமைப்பதற்கு ஜி.ரி.இசற் நிறுவனம் இருபது இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

சமாச எல்லைக்குட்பட்ட கடற்றொழிலாளர்கள் தாம் பிடிக்கும் மீனினங்களில் விற்பனை செய்ய முடியாத மீன்களை குளிரூட்டப்பட்ட அறையில் வைத்துப் பாதுகாப்பதற்கும், கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் பனிக்கட்டிகள் கரைந்து விரயமாகாமல் வைத்துப் பாதுகாக்கவுமே இந்தக் குளிரூட்டி அறை அமைக்கப்படவுள்ளதாகத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜி.ரி.இசற்றின் பிரதேச பணிமனையொன்று வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் தாளையடி கிராமத்தில் திறக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஜி.ரி.இசற்றின் உதவியுடன் கட்டப்படும் வீட்டுத் திட்டங்கள், வீதி அமைப்பு போன்ற வேலைத் திட்டங்களை, இந்த நிறுவன ஊழியர்கள் நாளாந்தம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தே கண்காணித்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (21)

பருத்தித்துறை மாவட்ட

## சாரணர் கிளைச் சங்கங்களின் அணிதிரள்வு நிகழ்வுகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கங்களின் அணிதிரள்வு நிகழ்வுகள் இந்தமாதம் 15 ஆம் திகதிமுதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தச் சாரணர் அணிதிரள்வு நிகழ்வுக்கு, பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தலைவர் ச.வசந்தகுமார் தலைமை தாங்கவுள்ளார்.

இந்த நிகழ்வுகள யாவும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. முதலாம் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், கௌரவ விருந்தினராக யாழ்.கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.வரதராசாவும், சிறப்பு விருந்தினராக அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் இ.குணநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

17 ஆம் திகதி நடைபெறும் நிகழவுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்விப்பணிப்பாளர் வ.அருளானந்தம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞான சுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மருதங்கேணிப் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் அன்பளிப்பு!

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி பிரதேச பாடசாலைகளுக்கு மேலும் ஒரு தொகுதி தளபாடங்கள் நிகொட் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு பெரிய லொறிகளில் கடந்த திங்கட்கிழமை இவை அனுப்பப்பட்டுள்ளன. நிகொட் நிறுவனத்தினால் ஏற்கனவே மூன்று தடவைகள் இந்தப் பிரதேசத்தில் பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இந்தப் பாடசாலைகளில் நிலவி வந்த தளபாடப் பற்றாக்குறை நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நிகொட் நிறுவன நிதியுதவியுடன் இந்தப் பிரதேசத்தில் புனரமைக்கப்பட்டுவரும் பாடசாலைக் கட்டடங்கள் இந்த வருட இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (122)

## ஹைஏஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்!

ஹைஏஸ் வானும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை, பருத்தித்துறை கொடிகாமம் வீதியிலுள்ள முள்ளிப்பாலத்திற்கு சமீபமாக இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்த இராசையா சுந்தரமூர்த்தி (வயது 35) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (14)

## சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறாத நிறுவன உரிமையாளர்கள்மீது நடவடிக்கை

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ளாத உற்பத்தி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என, சுற்றாடல் பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடகிழக்கு பிரதேசத்தில் அண்மைக்காலமாக உற்பத்தி நிறுவனங்கள் இயங்கிவருகின்றபோதும் அவை சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறாத நிறுவனங்களாக இயங்கிவருகின்றன.

இவற்றில் பேக்கரிகள், மரம் அரியும் சாலைகள், அரைக்கும் ஆலைகள், ஓட்டுத்தளங்கள் போன்றன அதிகளவு சூழலைப் பாதிக்கின்றபோதும், அவற்றினை அமைப்பதற்கு பொருத்தமற்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதாக நிறுவனங்களுக்கு சமீபகாலமாக உள்ள பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாத எவரும் நிறுவனத்தை நடத்துவதற்கு அனுமதிக்கமுடியாது என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (29)



# தகவல்களைக் கட்டுப்படுத்துபவர்களே இன்றைய உலகத்தை ஆளுகின்றனர்!

## - ஈழநாடு ஆண்டு நிறைவு விழாவில் இளம்பரிதி

இன்று உலகம் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினாலேயே ஆளுகை செய்யப்படுகின்றது. அந்த வகை யில் உலகத்தை ஆளுகின்றவர்கள் தகவலைக் கட் டுப்படுத்துபவர்களா கவும், தகவல்களைப் பெற்றுக் கொள்பவர்களாகவும் இருப்பவர்க ளே. இந்த உலகத்தின் வல்லமை மிக்க சக்தியாளர்களாகவும் இருக் கிறார்கள்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். ப.நோ.கூ சங்க மண்டபத்தில் நடை பெற்ற நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாமாண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற் றுகையில் யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தகவல் தொழில்நுட்பம் என்ப தும், ஊடகத்தின் வளர்ச்சிப் போக்கு என்பதும், ஒவ்வொரு நாடுகளின் தேசிய இனங்களின் வளர்ச்சியில் முக்கிய பங்கை வகித்துக் கொண்டி ருக்கின்றது.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் ஐம்பது வருடகால ஆக்கிர மிப்புக்கும், முப்பது வருடகால கொடிய யுத்தத்துக்கும் முகம் கொடுத்து இன்று மீண்டெழுந்து கொண்டிருக் கின்றோம்.

எப்பொழுதும் ஆக்கிரமிப்பாளர் கள் விடுதலைக்காகப் போராடும் இனத்துக்குரிய விடயங்களை இருட் டடிப்புச் செய்வதில் மிகுந்த கவன மெடுப்பார்கள். எம்முடைய போராட்ட வரலாற்றில் இங்கு என்ன நடக்கின் றது என்று தெரியாமல் அதாவது, உலகத்துக்கு இருட்டடிப்புச் செய்வ தில் இலங்கை அரசாங்கத்தினது வியூகங்களும், அரசுடன் துணை போன ஊடகங்களும், எங்களுடைய உண்மைத் தன்மைகளை வெளி யில் கொண்டு செல்லாததனால், எங் களுடைய விடுதலைப் போராட்டத் தின் வளர்ச்சியென்பது, அல்லது எங்களுடைய உணர்வுகள் என்பது உலகின் பக்கம் போய்ச்சேர்வதிலே காலம் சென்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில உள் நாட்டு ரீதியாக, அதாவது தொடர்ச் சியாக தமிழ்த் தேசிய ரீதியாக உணர்வுகளையும், உண்மை நிலை களையும், அவர்கள் இருட்டடிப்புச் செய்து கொண்டிருந்தபோது, அந்த இருட்டை விலக்கிய பத்திரிகை வரலாற்றிலே, ஈழநாடு முக்கியத் துவத்தை வகித்திருக்கின்றது என் பது நாம் அனைவரும் அறிந்திருக் கின்ற ஒரு உண்மை.

இன்று எமது போராட்டம் சர்வ தேச மயப்பட்டிருக்கின்ற இந்தச் சந் தர்ப்பத்தில் அந்த இருளை விலக்கி ஒளியூட்டி, உணர்வூட்டி வருவது எமது தமிழ்த் தேசியப் பத்திரிகை களாகும்.

பத்திரிகைகளில் மிகவும் முக்கிய மானது, பத்திரிகைகளின் ஒழுக்கம். ஏனெனில், இன்று வெளிவருகின்ற பல பத்திரிகைகளில் இலாப நோக் கம், அல்லது முதலாளித்துவ அடிப் படையிலேயே செயற்பட்டுக்கொண் டிருக்கின்றன. ஆனால் இதன்மூலம் ஒரு சமூகம் ஆரோக்கியம் பெறுமா, அல்லது தேசியம் நிலைபெறுமா என்று பார்க்கின்றபொழுது அங்கே ஒரு கேள்வி எழுகின்றது.

எனவே நான் இந்த நமது ஈழ நாட்டை ஒவ்வொருநாளும் பார்த்து வருகையில் ஒரு ஒழுக்கத்தைப் பேணுகின்றதா என்பதைக் கவனிப் பேன். அண்மையில் வெளிவந்த சில பத்திரிகைகளைப் பார்த்தால் மனித சிந்தனைப் போக்குக்கேற்ப இலாபத்தை அடைவதற்கான சில குறிக்கோள்களைக் கையாள்வது போல, பத்திரிகைகள் இலாப நோக் கில் கொண்டியங்குகின்ற போக்கு இருக்கின்றது. சில பத்திரிகைகளில் முன்பக்கம் அரைவாசிக்கு அரசியல் விடயமும் மிகுதி அரைப்பக்கம் ஏதோ வொரு கவர்ச்சிகரமான படத்தை அது கொண்டிருக்கும் அதனுடைய நோக்கம் என்ன?

சமூகத்துக்கு உயிர்ப்பா, சமூகத் துக்குப் பயன் இல்லை. விற்பனை என்பதையே நோக்கமாகக் கொண்டி ருக்கின்ற பொழுது, அதுவே ஒரு நோக்கமாக இந்த ஈழநாடு பத்தி ரிகை கொண்டிருக்குமா, கொள் ளுமா என்ற கேள்வி எங்களுக்குள் எழுந்து கொண்டிருந்தது. ஆனால் இதுவரை நான் அவதானித்ததில் அது இல்லை. எனவே ஒழுக்க ரீதி யாக உயர்ந்த பத்திரிகையாக நான் இதனைப் பார்க்கின்றேன்.

சிங்கள தேசிய ஊடக வளர்ச் சிக்கேற்ப தமிழ்த் தேசியத்தினு டைய ஊடக வளர்ச்சி இன்று ஏற் பட்டிருக்கின்றதா? எங்களுக்கெதி ரான ஆக்கிரமிப்புக்களையும், யுத் தத்தையும் அரசு எம்மீது திணித்துக் கொண்டிருக்க அதற்கு முகம் கொடுத்து நாம் உறுதியாகப் போராடி, உத்வேகத்து னும் போரிட்டுக் கொண்டிருக்க, எமது மக்கள் பெரும் அவலங்களைச் சுமந்துகொண்டிருக்க, அதனை இருட் டடிப்புச் செய்துகொண்டிருந்தபொழுது, அதற்குத் துணை நின்றது இந்தச் சிங்கள தேசிய ஊடகங்கள்தான்.

இந்த நிலையில் அதை வெளிக் கொண்டு வருகையில், எமது தமிழ்த் தேசிய ஊடகங்கள் ஒரு தனித்துவ மான வளர்ச்சியைப் பெற்றதா என்று பார்த்தால் இல்லை.

எங்களுடைய தலைவர் அண்ணை யில்கூட ஒரு கருத்தைத் தெரிவித் திருந்தார். அதாவது இன்று நாம் எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து வருகின்றோம். ஆனால் நாம் வளர்ச்சி பெறவேண்டிய விடயம் என்னவெனில் ஊடகத்துறையில் பாரிய வளர்ச்சி யொன்றைப் பெறவேண்டும். ஒரு சுதந்திர விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு தேசிய இனமாகிய நாம் எதை இன்று கொண்டிருக்க வேண்டு மெனில், தமிழ்த் தேசிய ஊடக வளர்ச்சித் துறையில் நாம் வளர்ச்சி பெறவேண்டும்.

எனவே இந்த அடிப்படையில் எமது தமிழ்த் தேசியப் பத்திரிகை களும், தமிழ்த் தேசிய ஊடகவியலா ளர்களும் இந்தத் துறையை வளர்ச்சி செய்வதில் மிகுந்த அக்கறை எடுப் பார்கள் என நம்புகின்றேன். அதே நேரம் எமது தமிழ்ச் சமூகமும், கலை இலக்கிய ஆர்வலர்களும் ஆக்க மும், ஊக்கமும் கொடுப்பார்கள் என வும் நான் நம்புகின்றேன்.

இன்னொரு விடயம் ஒரு பத் திரிகை என்பது அந்த மக்களுடைய உணர்வுகளை, அபிலாஷைகளைப் பிரதிபலிக்க வேண்டும். ஒரு தேசி யம் சார்ந்த அந்த மக்களுக்கே யுரிய, அந்த மக்களால் விரும்பப் படும் பத்திரிகையென்பது அந்த மக்களுடைய உணர்வுகளைப் பிரதி பலிக்கவேண்டும்.

இந்த அடிப்படையில் இன்று நாம் இயல்புநிலையை வேண்டி நிற்கின் றோம். ஒரு இயல்புநிலை தோற்றம் பெறவேண்டுமென நாம் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இயல்புநிலை ஒன்று ஏற்படாத சந் தர்ப்பத்தில் ஒரு அசாதாரண நிலை தான் இங்குள்ளது. அந்த அசாதா ரண நிலையினால் நாம் ஒவ்வொரு வருமே நேரடியாகவும், மறைமுக மாகவும், துன்பப்பட்டுக் கொண்டிருக் கின்றோம். அல்லது அதற்குள் சிக் குண்டு தவித்துக் கொண்டிருக்கின் றோம்.

இந்த நிலையில் என்ன நடந் தது. என்ன நடக்கப்போகின்றது என்பது அடிக்கடி எமக்கிடையே எழுந்து கொண்டுள்ள கேள்வி. இரவு நித்திரைக்குச் சென்று காலை விழித் தெழுகின்ற நேரத்திலும் எமக்கி டையே எழும் கேள்வியும் இதுதான்.

எனவே இந்த வினாவுக்கான விடையை அறிய நாம் தேடுவது பத்திரிகையே. எனவே எமது மக் கள் தற்போது பத்திரிகையை நாடு வது அதிகமாகவுள்ளது. இதேநேரம் புலம்பெயர்ந்த நாடுகளில்கூட இதே எதிர்பார்ப்புத்தான் இருக்கிறது. அதா வது புலம்பெயர்ந்த நாடுகளில் இருக கும் தமிழ் மக்கள்கூட குடாநாட்டுப் பத்திரிகைகளை இணையத்தளம் மூலம் பார்த்த பின்னரே, தமது கடமை யைச் செய்வதை நான் பார்த்தேன்.

எனவே பத்திரிகை என்பது எமது வாழ்நாள் கடமைகளிலே மிக, மிக முக்கியமானதாக இருக்கின்றது. தற்போது தேநீர் குடிக்க மறந்தாலும் பத்திரிகை படிக்க எவரும் மறப்ப தில்லை.

இன்றைய யுகமென்பது ஒரு விடுதலை யுகம். நாம் அடக்கு முறைக்குள் உட்பட்டுள்ளோம். ஒரு விடுதலை வியூகத்துக்குள் நாம் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றோம், சுரண்டப்பட்டுக்கொண் டிருக்கிறோம்.பாதிக்கப்பட்டுக் கொண டிருக்கின்றோம். இவ்வாறு நாம் உள்ள போது முதலில் நாம் கெரில் லாப் போரை நடத்தியபின் மரபு வழிப் படையாக மாறி, இன்று தீவிர மரபுவழிப் படையாக மாறி நிற்கின்ற நிலையில் எங்கள் மக்களின் தேசிய உணர்வுகளைச் சிதைத்து, அவர் களின் வாழ்க்கைக் கட்டுமானங்கள் அழியுண்டு நாம் சின்னாபின்னமா கின்ற ஒரு சூழ்நிலையில் விடுதலை யின் வியூகங்களையும், நுட்பங்களை யும் ஆக்கிரமிப்பாளர்கள் வீழ்த்து கின்றபோது அதிலிருந்து எமது மக்களை விழிப்புணர்வு நிலைக்குக் கொண்டுவருவதற்கு முதன்மையான காரணியாக ஊடகங்கள் இருக்க வேண்டும்.

கியூபாவில் பிடல் கஸ்ரோவைக் கொல்வதற்கு 210 தடவை முயற்சி மேற்கொண்டபோதும் அவற்றை முறியடிக்க அந்த மக்களின் விழிப் புணர்ச்சி, அந்த மக்களின் துப்பறி யும் ஆற்றல்தான் அதனை முறிய டித்தது.

ஒரு விடுதலைப் போராட்டத்தின் பலமாகவும், எல்லாமுமாக இருப்ப வர்கள் மக்கள். எனவே இந்தப் பத் திரிகைகள் அவர்களுக்கான சரி யான விழிப்புணர்வை ஊட்டினால் அவர்கள் மேலும் வல்லமை பொருந் தியவர்களாக மாறுவார்கள்.

இவ்வாறு ஊடகங்கள் செய்தால் எங்களுடைய நிலையில் பல மாற் றங்கள் என்பன ஏற்படும். எங்களி டையே வாழ்வியல் ரீதியில் பல முன்னேற்ற ரீதியான மாற்றங்கள் ஏற்படும். அதனை இந்தப் பத்தி ரிகைகள் கொள்ளவேண்டும். கொள் ளும் என எதிர்பார்க்கின்றோம்.

அதிகாரப் பரப்பினாலும், ஆக் கிரமிப்பாளர்களின் ஆயுத வெறியி னாலுமே எங்களுடைய ஜனநாயகம் நசுங்கியது. ஆனால் நாம் ஒரு சுதந்திர வேட்கை கொண்டு ஒரு விடு தலைக்கான ஆயுதக் கருவிகளைக் கையேந்தி தீர்த்த தீரமான வேட்டுக் களாலேயே இன்று ஜனநாயகம் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. இது நாம் உருவாக்கிய பலத்தினால் ஏற்பட்டது.

எமக்கெதிரான ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் பயன்படுத்திய அந்த இராணுவ ரீதியான நிலையில் நாங் கள் ஒரு சமபலத்தைக் கொண்ட தனாலேயே சமாதானத்துக்கான சூழல் ஏற்பட்டது. இன்று இந்தச் சமபலத்தை நாம் பேணுகின்ற நிலை யிலும் அரசினுடைய கவனம் தமது பலத்தை விரிவாக்கம் செய்து அல்லது அதிகரிக்கச் செய்து தமி ழர்களுடைய சம பலத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தித் தமிழர் களைப் பாதிக்கின்ற அரசியல் இரா ணுவ, இராஜதந்திர, பொருளாதார புலனாய்வு ரீதியான வியூகங்கள் வன்முறை வியூகங்கள் அடங்கிய வழிமுறைகள் மூலம் தமிழர்களு டைய சமநிலையைக் கீழிறக்கச் செய்கின்ற சூழ்ச்சிகரமான அரசி யல், இராணுவ, பொருளாதார இராஜ தந்திரப் போக்குகள் முன்னெடுக் கப்படுகின்றன.

எந்தப் போக்குகள் வந்தாலும் அதற்கு முகம் கொடுத்து முறியடிக் கின்ற வல்லமை எமது தேசியத் தலைவர் கொண்டிருக்கின்றார். எமது படை கொண்டிருக்கிறது. எமது மக்கள் கொண்டிருக்கின்றார் கள். எமது அறிஞர்கள் கொண்டி ருக்கின்றார்கள். எனவே தமிழர் தரப்பு ஒன்றுகூடி இந்த வல்லமை யைக் கொண்டிருக்கின்றபோது, அவர்கள் அதிகரிக்கின்ற அந்தச் சமபலத்துக்கேற்ப எங்களுடைய சமபலத்தையும் எல்லா வழிகளி லும், எல்லாத்துறையிலும் அதிகரிப் போமேயானால் யுத்தத்தையும் எம் மீது திணிக்கவும் முடியாது. எங் களை நசுக்கவோ, அழிக்கவோ முடி யாது.

எனவே தீர்வென்பது பலம்தான். அந்த அடிப்படையில் எமது தலை வரும், அரசியற்துறைப் பொறுப்பாள ரும், எமது இயக்கமும் அதை நோக்கியே நகர்வுகளை மேற்கொள் கின்றனர். இதய சுத்தியுடன் எங் களது போக்குகளை நாம் மேற் கொள்கின்றோம். விடுதலை வீரன் ஒரு இலட்சியவாதியாக இருப்பான்.

நாம் வேண்டி நிற்பது மானிட விடுதலையைத்தான். எங்கள் ஒவ் வொருவரது உயர்வான சிந்தனை யிலும், உறுதியான போக்கிலும், விடுதலைக்கான விழிப்பிலுமே அது தங்கியுள்ளது. அவர்கள் தமது பலத்தை எவ்வாறு அதிகரிக்கின் றார்களோ, அதற்கேற்ற திட்டங் களை எவ்வாறு வகுக்கின்றார்களோ அதுபோல் நாங்களும் வளர்ப்போம். எனவே பலத்தை எப்பொழுதும் பேணிக்கொள்ளும் வரை எம்மை எவரும் பலவீனப்படுத்த முடியாது என்ற நம்பிக்கை எமக்குத் திடமாக உண்டு. அந்த நம்பிக்கை எமது தலைவருக்கும் உண்டு. □

# எழுத்துக்கள் மூலம் சமுதாயத்தை உருவாக்குவதே ஜனநாயக கடமை!

## - நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா



வரலாற்றில் எழுத்துக்கள் மூலம் ஒரு சமுதாயத்தை உருவாக்குவது ஜனநாயகக் கடமையாகும். அதன் அடிப்படையில் தமிழர்கள் மத்தி யிலே நமது ஈழநாடு ஒரு இலட்சி யப் பயணத்தை மேற்கொண்டு வரு கின்றது என, யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனா திராசா 'நமது ஈழநாடு' இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேசும் போது தெரி வித்தார். அவர் மேலும் கூறுகையில்-

நாம் ஜனநாயகத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். அடிமைத் தனத் துக்கு எதிராக, ஏகாதிபத்தியத் துக்கு எதிராக, தனது சமுதாயத் தின் விடுதலைக்காக அனைவரும் குரல் கொடுக்கவேண்டும்.

தமிழ்மொழிக்கு ஐயாயிரத்துக் கும் மேற்பட்ட ஆண்டுகளைக் கொண்ட வரலாறு உண்டு. எமது மொழிக்கு ஆட்சி இல்லாத காரணத் தினால், சிங்களவரில் அடக்கி ஆள நினைக்கின்ற அரசியல் சக்திகள் தமது மொழிக்கான அகராதி ஒன் றினை அமைக்கக் கடந்த 50 ஆண்டு காலமாக முயற்சித்தும் அது சரிவர அமையவில்லை.

ஆனால் எமது தமிழ்மொழி- அக ராதிக்குள் அடக்கமுடியாத சிறந்த மொழியாகும். இந்த மொழியின் சொந்தக்காரர் உரிமைகளை மட்டு மல்ல, அடிப்படை உயிர் வாழ்க்கை யையும் மறுக்கப்பட்டுக்கொண்டி ருக்கின்ற இந்த நிலையில் எமது எழுத்தின் பணி எமது சமுதாயத் தைக் கட்டி எழுப்புவது மாத்திர மல்ல விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வும் வேண்டும்.

நாட்டில் தமிழ் மக்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளும், சிங் கள மக்களுக்காக ரணில் விக்கிரம சிங்கவும் ஒரு சமா தான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மேற் கொண்டது ஒரு வரலா ற்றுத் திருப்புமுனை.

ஆனால் அமைதி, யுத்தநிறுத் தம் என்ற பெயரில், எம்மைச் சூழ்ந்து நிற்கின்ற சூழ்ச்சிகளும், வஞ்ச கத் தனங்களும் தொடர்கின்றன. எமது சமுதாயத்திலே எமது இனத்தின் விடுதலைக் காக ஆயுதம் ஏந்திய வர்களில் சில குழுக்கள் கொள்கை மாறி, இலக்கு மாறி தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுக்கின்ற வகையிலே, பேரினவாத சக்திகளுடன் இணைநது செயல்படுவதை நாம் மிகவும் உன் னிப்பாகச் சிந்திக்கவேண்டும்.

அவ்வாறான சக்திகள் எமது தமிழ்த் தேசியத்தின் அடித்தளத் தைத் தகர்ப்பதற்காக, தற்போது செயல்படுகின்றன. இதன் ஒரு கட்ட மாக இராணுவ புலனாய்வாளர்கள் பலர்-இலங்கையில் மட்டுமல்ல தமிழ மக்கள் மத்தியிலும் விதைக்கப்பட் டுள்ளனர். இந்த விடுதலைப் புலி களின் ஆயுதபலமும், தமிழ் மக்களின் போராட்ட பலமும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவமாக ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ள நிலையில் இதனை சர்வதேசம் அங்கீகரித்திருக்கின்றது.

இதனை முறியடிப்பதற்கு பல சக்திகள் செயற்படுகின்றன. இதி லும் கடந்த பத்து ஆண்டுகளில் எமது ரகசியங்களை சிங்கள பேரினவாத சக்திகளுக்குக் கொடுப்பதில் ஈடு பட்டவர்களுக்கு சிறப்பாக இந்த சமாதான காலம் பயன்படுகின்றது என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும் புகின்றேன். தமிழத் தேசத்தின் சுதந் திரப் போராட்டம் ஒன்று முடிவடை கின்ற நிலையில் சமாதானம் என்ற தேவை இருந்தாலும், நாம் போராடு வதற்கு ஆயத்தமாக இருக்கவேண் டிய சூழ்நிலையில், இருக்கின்றோம்.

எமது இனத்தை ஒற்றுமைப்படுததி, ஜனநாயக ரீதியாகவும், ஆயுத ரீதி யாகவும் பெற்றிருக்கின்ற பலத்தை மேலும் வலுவடையச் செய்து, எமது இனத்தின் எதிர்கால நலனுக்காக - எமது விடுதலையை நிலைநாட்ட எழுத்தாளர்கள் சுதந்திரமாகக் கருத் துக்களை வெளிப்படுத்தவேண்டும்.

நமது ஈழநாடு எமது இனத்தின் சுதந்திரத்துக்காக வீறுநடைபோட, தமது கடமைகளைச் சிறப்பாக மேற்கொள்ளவேண்டும்.

இந்த சமாதான காலத்தில் புரட்சி களை உருவாக்கிய எழுத்தாளர் கள் அதிகமாகத் தேவைப்படுகின் றார்கள். எனவே எழுத்தாளர்கள் எமது விடுதலைக்காகச் சிறப்பாகச் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். □

# இந்தியாவின் இரண்டு மாநிலங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஐம்பத்தாறு பேர் உயிரிழப்பு!



(அசாம்)

இந்தியாவின் அசாம் மற்றும் நாகலாந்து மாநிலங்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதல்களில் சுமார் 56 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இறுதியாக நேற்றைய தினம் அசாம் மாநிலத்தில் சன நெருக்கடிமிக்க சந்தைப் பகுதியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் 15 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்களை நாகலாந்து தேசிய விடுதலை முன்னணியே நடத்தியிருக்க வேண்டுமென பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாக்குதல்களையடுத்து, ஏற்பட்ட காயங்களால் அவதிப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்க முடியாமல் மாநில வைத்தியசாலைகள் பெரும் நெருக்கடிக்குள் சிக்கித்தவித்தன.

நேற்று முன்தினம் நாகலாந்தில், வர்த்தக நகரான தீமாபூர் பகுதியில் சனநெருக்கடிமிக்க சந்தைப் பகுதி, ரயில் நிலையம் போன்றவற்றின் மீதே வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களால் சந்தைப் பகுதி மற்றும் ரயில் நிலையப் பகுதி இடிந்து வீழ்ந்ததாகவும், இதனால், பெருமளவானோர் கொல்லப்பட்டதாகவும் உள்ளூர் வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அசாம் மாநிலத்திலுள்ள சாந்திபூர் சந்தைப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் வர்த்தகர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் எழுவர் காயமடைந்தனர்.

அத்துடன், அசாம் மாநிலத்திலுள்ள மூன்று சந்தைப் பகுதிகள் மீது போடோ கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 19 வர்த்தகர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல்களையடுத்து, அசாமின் தீமாபூர் பகுதியில் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## அமெரிக்கா உட்பட அதன் நேச நாடுகள் மீதான தாக்குதலுக்கு தயாராகுங்கள்!

### அல்கொய்டா முஸ்லிம்களுக்கு அழைப்பு



அமெரிக்கா மற்றும் அதனுடைய நேசநாடுகளான அவுஸ்ரேலியா, பிரான்ஸ், போலந்து, நோர்வே, தென்கொரியா, மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தயாராகும்படி அரபு உலகததுக்கு அல்கொய்டா அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

அல்கொய்டா அமைப்பின் தலைவரான ஒஸாமா பின்லேடனுக்கு அடுத்த நிலையிலுள்ளவராகக் கருதப்படும் ஜமன்-அல்-சவாரி அல் ஜெசிரா தொலைக்காட்சிக்கு அனுப்பி வைத்துள்ள ஒளிப்பதிவு நாடாவிலேயே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அந்த ஒளிநாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஆப்கானிஸ்தான் ஈராக் ஆகிய நாடுகள் மீது அமெரிக்காவின் தாக்குதலுக்கு ஒத்துப்பாடும் நேச நாடுகள் பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களையும் ஆதரித்துவருகின்றன.

பலஸ்தீனப் போராளிகளின் தலைவர்களது கொலைகளுக்கு மேற்கு உலகம் அனைத்தும் காரணமாக இருக்கிறது. எனவே பலஸ்தீனத்தினை விடுதலைபெறச்செய்வது ஒவ்வொரு முஸ்லிம்களினதும் தலையாய கடமையாகும்.

பலஸ்தீனத்திலே நாங்கள் யூதர்களுக்கு மட்டும் எதிராகப்போராடவில்லை. இஸ்லாமிய உலகத்துக்கு எதிராக உள்ள உலகநாடுகள் அனைத்துக்கும் எதிராகவே நாங்கள் போராடுகின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹெயிட்டியின் செனற்சபை தலைவர் அந்நாட்டுப் பொலிஸாரால் கைது!



ஹெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதி ஜீன் பேனாட் அரிஸ்ரைட்டின் ஆதரவாளர்களான செனற் சபைத் தலைவர் உள்ளிட்ட மூன்று அரசியற் தலைவர்கள் ஹெயிட்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஹெயிட்டியின் தலைநகர் போட் ஒவ் பிறின்சில் மூன்று ஹெயிட்டிப் பொலிஸாரினது சடலம் சிரச்சேதம் செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப் பட்டது.

இந்தக் கொலைகளுக்கும், கைது செய்யப்பட்டவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்ட ஹெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதி அரிஸ்ரைட் நாடு திரும்பவுள்ள நிலையில் ஹெயிட்டியில் வன்முறைகள் வெடித்துள்ளன.

இந்த வன்முறைச் சம்பவங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி பொலிஸாரைக் கொலை செய்தவர்களுக்கும் குறிப்பிட்ட அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாகப் பொலிஸ் தரப்பு தெரிவித்தது.

ஆனால், தான் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டதாகவும் தன்னைக் கைது செய்வதற்கு எந்தக்காரணங்களும் இல்லையென்றும், பொலிஸார் தன்னைக் கைது செய்தமையால் தனது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் செனற் சபைத் தலைவர் யுவோன் பியூலி தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி அரிஸ்ரைடடின் ஆதரவாளர்கள் ஹெயிட்டிய நகரங்களில் பொலிஸாருக்கு எதிரான கெரில்லாத்தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாகவும், அந்தத தாக்குதலுக்கு 'ஒப்பரேசன் பாக்தாத்' எனப் பெயரிடப்பட்டுள்ளதாகவும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

பொலிஸார் கடத்திச் செல்லப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளமையானது, ஈராக்கின் பாக்தாத்தில் இடம்பெறும் கடத்தற் சம்பவங்கள் ஹெயிட்டியிலும் பரவிவிட்டதோ என்கின்ற அச்சத்தினைத் தோற்றுவித்துள்ளதாக அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேசமயம் - ஹெயிட்டி அரசு நாட்டில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முகமாக அரிஸ்ரைட்டின் ஆதரவாளர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஹெயிட்டியில் ஏற்பட்டுள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக கடந்த யூன் மாதம் ஐக்கிய நாடுகளின் சபையின் 3 ஆயிரம் அமைதிப்படைகள் அனுப்பப்பட்டுள்ளபோதும், அவர்களால் இதுவரையில் ஹெயிட்டியில் ஏற்பட்டுள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல் எதிரொலி

# காஸாவின் வடபகுதி அகதி முகாமைச் சூழ 9 கி.மீ தூரம் இஸ்ரேல் படையினர் வசம்!



காஸாவின் வடபகுதி நகரிலுள்ள ஜபாலியா அகதிமுகாமைச் சூழவுள்ள 9 கிலோ மீற்றர் பகுதியை இஸ்ரேல் படையினர் தாங்கிகளின் உதவியுடன் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

பலஸ்தீனப் போராளிகள் இந்தப் பகுதியிலிருந்து குவாசம் என்ற எறிகணைகளால் இஸ்ரேலின் சிடேறோட நகரம் மீது தாக்குதல் நடத்துவதாகவும் அதனைத்தடுப்பதற்காகவே இஸ்ரேல் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக இஸ்ரேல் படையினர் பலஸ்தீனப் பகுதியில் நடத்திய தாக்குதல்களில் சுமார் 50 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஸாப்பகுதியில் தமது படை நடவடிக்கையை இஸ்ரேல் படையினர் மேலும் விரிவுபடுத்த வேண்டுமென இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நேற்றையதினம் ஜபாலியா குடியிருப்புப் பகுதியில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட றொக்கட் தாக்குதலில் இரண்டு ஜிகாத் அமைப்பு உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இதேவேளை நேற்று முன்தினம் மாலை காஸாப் பகுதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் நன்கு அறியப்பட்ட இரண்டு ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்கள் தமது அமைப்பின் உறுப்பினர்களெனவும், அவர்கள் மெடிமுஸ்தடா மற்றும் காலித் அம்ரீட் எனவும் ஹமாஸ் அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனால், இந்தத் தாக்குதலை தாம் நடத்தியது தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் எவ்விதததகவலையும்வெளியிடவுமில்லை உறுதிப்படுத்தவுமில்லை.

தற்போது நடைபெற்று வரும் மோதல்களில் பொதுமகன் ஒருவர் உட்பட ஐந்து இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இஸ்ரேல் நகரான சிடேறோட் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய எறிகணைத் தாக்குதலினால் இரண்டு சிறுவர்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்தே இஸ்ரேல் படையினர் இந்த நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

இந்த நடவடிக்கையில் 2000 இஸ்ரேல் படையினரும் 200 தாங்கிகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பலஸ்தீனத் தீவிரவாதிகளால் இஸ்ரேல் நகர் மீது ஏவப்படும் குவாசம்ஸ் என்ற எறிகணை ஒன்பது கிலோ மீற்றர் தூரவீச்சுக்கொண்டது. எனவே தீவிரவாதிகள் ஜபாலியா பகுதியிலிருந்தே இந்த எறிகணையை ஏவுவதாக நம்புகின்றோம். அதனாலேயே 9 கிலோ மீற்றர் நீளமான தூரத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளோம்.

அத்துடன் எமது இந்த நடவடிக்கை மூலம் பயங்கரவாதிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்திவிட்டதாக நினைக்கின்றோம். இஸ்ரேல் நகரத்தையும், எமது சிறுவர்களைக் கொல்வதையும் தடுக்கும் தகுதியுடன் நாம் இருக்கின்றோம் என இஸ்ரேலிய இராணுவப்பேச்சாளரான கப்டன் ஷரோன் பீன்கோல்ட் தெரிவித்தார்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை ஒரு போர்க் குற்றமெனத் தெரிவித்துள்ள பலஸ்தீன அதிகாரிகள் அங்கு அவசரகாலநிலையையும் பிரகடனப் படுத்தியுள்ளனர்.

இஸ்ரேலின் இந்த மனிதநேய



மற்ற, இனஒழிப்பு நடவடிக்கையை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு பலஸ்தீன ஜனாதிபதி யாசீர் அரபாத் உலகநாடுகளைக் கேட்டுள்ளார்.

இஸ்ரேல் படையினரால் நடத்தப்படும் இந்தத்தாக்குதல் ஒரு வரையறைக்குள் உட்பட்டதாக இருக்க வேண்டுமென அமெரிக்கா கோரியுள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பாக பிரான்ஸ், ரஷ்யா போன்ற நாடுகளும் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை - காஸாவில் விமானம் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படமென இஸ்ரேல் நேற்று முன்தினம் வெளியிட்ட படத்தில் மூவர் ஐ.நா.சபையின் வாகனத்தை நோக்கி நடந்து சென்றதாகவும், அதில் ஒருவர் குவாசம் எறிகணையை கையில் தாங்கிச் செல்வதாகவுமுள்ளது.

ஆனால், இந்த வாகனம் ஐ.நா. சபையிடமிருந்து கடத்தப்பட்டதா? அல்லது போலியான வகையில் அந்த வாகனத்தின் மீது ஐ.நாவின் இலட்சினை பொறிக்கப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவரவில்லையென செய்திகள் தெரிவித்தன.

இருந்தும் இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐ.நா.தெரிவித்துள்ளது.

# ஈராக்கின் பலூஜா நகரில் நேற்றும் அமெரிக்க விமானங்கள் தாக்குதல்



ஈராக்கின் பலூஜா நகரில் நேற்றைய தினமும் அமெரிக்க விமானப் படையினரின் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமிருந்தன.

அல் சர்காவி தலைமையிலான கிளர்ச்சிவாதிகளின் ஆயுதக் களஞ்சியசாலை மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது. அத்துடன், தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் சுமார் 15 கிளர்ச்சிவாதிகள் வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களுடன் முன்னேறிக் கொண்டிருந்ததாகவும், இவர்களும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - கடந்த இரண்டு நாள் மோதல்களுக்குப் பின்னர் சமரா நகரின் பெரும்பகுதி அமெரிக்க மற்றும் ஈராக் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

கிளர்ச்சிவாதிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த இந்த நகரத்தைக் கைப்பற்றுவதற்கு அமெரிக்க மற்றும் ஈராக் படைகள் பரந்தளவில் தாக்குதலைத் தொடுத்திருந்தன.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டே கிளர்ச்சிவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதியைத் தாம் மீளக் கைப்பற்றியதாக அமெரிக்க மற்றும் ஈராக்கின் அரசாங்கங்கள் தெரிவித்தன.

பலூஜாவில் நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் கிளர்ச்சிவாதிகளின் ஆயுதத் தொழிற்சாலைகள் அடங்கிய பல கட்டடங்கள் அழிக்கப்பட்டதாகவும் குறைந்தது 10 தொடக்கம் 15 கிளர்ச்சிவாதிகள் வரை கொல்லப்பட்டிருக்கலாமெனவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

அத்துடன், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டவேளை - கிளர்ச்சிவாதிகளின் தலைவரான அல் சர்காவி அந்த இடத்தில் இருந்தாரெனவும் அமெரிக்கா தெரிவித்தது.

பலூஜாவில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் இரண்டு பொது மக்கள் கொல்லப்பட்டதுடன், பத்துப் பேர் படுகாயமடைந்ததாக பலூஜா நகர வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை - சமரா நகர்ப் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக தாம் நடத்திய தாக்குதலில் 125 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டும், 88 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்தது. ஆனால், இந்த இருநாள் சண்டையில் பெருமளவு பொதுமக்களை அமெரிக்க இராணுவத்தினர் பிடித்துள்ளதாக உள்ளூர் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சமரா நகர்ப் பகுதியில் தற்போது தாக்குதல் ஓய்ந்துவிட்டது என ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சர் ஹஸீம் சாலன் அல் அராபியத் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார். அத்துடன், தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவும், அப்பகுதியை மீளக் கட்டியெழுப்பவும் 40 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சமரா நகர் மீதான தாக்குதல்களில் சுமார் 5 ஆயிரம் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இது ஈராக் மீதான படையெடுப்பின் பின்னர் அமெரிக்கப் படையினரைப் பெருமளவில் ஈடுபடுத்தி நடத்தப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் எனவும் செய்திகள் தெரிவித்தன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நுணாவில் பகுதி விவசாயிகளுக்கு இலவசமாக விவசாய உள்ளீடுகள்!

## யாழ். அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் படையினரால் கையளிக்கப்பட்ட நுணாவில், மறவன்புலவு ஆகிய பகுதிகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உள்ளீடுகளும் உரங்களும் இலவசமாக வழங்கப்படும் என அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

நுணாவில் மறவன்புலவு பகுதிகளில் காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதி விவசாயிகளுக்கான கூட்டம் நேற்று நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - படையினரால் அனுமதிக்கப்பட்ட மேற்படி 185 ஏக்கர் நிலப்பரப்பிலும் காலபோக நெற்செய்கைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்காக விவசாயிகளுக்கு இலவசமாக உள்ளீடுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

படையினரால் விடுவிக்கப்பட்ட மேற்படி பிரதேசங்களை காலபோக நெற்செய்கையில் ஈடுபடாதவர்களின் நிலங்கள் வேறு நபர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

காலபோக நெற்செய்கையின்போது கட்டாக்காலி கால்நடைகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க முட்கம்பி வேலிகள் அமைத்து தருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் - திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம் பிள்ளை, கமநலசேவைத் திணைக்கள ஆணையாளர் சுந்தரேசன், இராணுவ அதிகாரி பெரேரா மற்றும் விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதிகள் பங்குபற்றினர். (29)

## வட்டமடு மேய்ச்சல் நில விவகாரம்

# புலிகள் - முஸ்லிம்கள் இன்று சந்திக்கவுள்ளனர்

(அம்பாறை)

அம்பாறை - வட்டமடுப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற வன்செயல்களையடுத்து ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்கும் நோக்குடனும், தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும் இன்று அம்பாறையில் புலிகளின் பிரதிநிதிகள், முஸ்லிம்களின் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர்.

அக்கரைப்பற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையிலான குழுவினரும், முஸ்லிம்கள் தரப்பில் அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளன செயலாளர் ஐ.எம்.இப்றாஹிம் தலைமையிலான குழுவினரும், வட்டமடு கால்நடை வளர்ப்போர் சங்கத்தைச் சேர்ந்தோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 9 ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாண காணி ஆணையாளர் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் வட்டமடு பிரதேசத்திற்கு வருகைதந்து விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் மற்றும் தமிழ் விவசாயிகள் ஆகியோரைச் சந்தித்து வட்டமடு காணித் தகராறு தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். (07)

# காமினி பொன்சேகாவின் உடல் நேற்று தீயுடன் சங்கமமானது!

(கொழும்பு)

காலஞ்சென்ற பிரபல திரைப்படக் கலைஞரும் அரசியல்வாதியுமான காமினி பொன்சேகாவின் பூதவுடல் நேற்று மாலை சுதந்திர சதுக்கத்தில் அமைக்கப்பட்ட விசேட சிதைவில் அக்கினியுடன் சங்கமமாகியது.

நேற்றைய இறுதிக் கிரியைகளில் திரைப்படக் கலைஞர்கள், அரசியல்வாதிகள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை 68 ஆவது வயதில் காலமான காமினி பொன்சேகாவின் பூதவுடல் நேற்றுப் பிற்பகல் 12.35 மணிக்கு ஜாஎல இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு



பேழை விசேட ஊர்தியில் சுதந்திர சதுக்கத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அங்கு பொதுமக்களின் அஞ்சலிக்குப் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அரசியல்வாதிகள், கலைஞர்களின் இரங்கலுக்கு பின்னர் பூதவுடல் சிதையில் வைக்கப்பட்டு அக்கினியுடன் சங்கமமாகியது.

# தோட்டத்தில் புதைந்திருந்த குண்டு வெடித்து ஒருவர் பலி!

## மலையகத்தில் சம்பவம்

(கொழும்பு)

வெலிக்கடை ஊவா பரணகம பகுதியில் உள்ள அக்கிறும மலைத் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் உயிரிழந்தார்.

கோபாலன் விமலானந்தன் என்பவரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவத்தில் ஆனந்த குமாரன் என்பவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றின் மீது மண்வெட்டியால் கொத்திய போதே, இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# யாழ். மகளிர் சங்கம நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முன்பள்ளி இணைப்பாளர் க.வசந்தகுமாரி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை ஆதீன குரு முதல்வர் இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர் திருமதி ரூபசிங்கம், வண பிதா இராஜரட்ணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார்.

2 ஆம் லெப்: மாலதியின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையை நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அணிவித்தார்.

ஆசியுரையை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் நடாளுமன்ற உறுப்பினர்களும் கஜேந்திரன், சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் உட்பட ஆயிரக்கணக்கான பெண்களும் கலந்துகொண்டனர்.

## ஒரு தொகுதி வெடிபொருட்கள் மட்டக்களப்பில் மீட்பு!

மட்டக்களப்பு - பொலன்னறுவை மாவட்ட எல்லைக் கிராமமொன்றில் கைவிடப்பட்ட நிலையில் ஒரு தொகுதி வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மாலை செயலிழக்க வைக்கப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மக் நிறுவன தொழில்நுட்ப வழிகாட்டலுடன் இந்த வெடிபொருட்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

## அரியநேந்திரன் எம்.பிக்கும் கொலை பயமுறுத்தல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் மற்றுமொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேந்திரனுக்கும் தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த அச்சுறுத்தல் தனக்கு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவிருக்கும் கிரான் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளக் கூடாது என இந்த அச்சுறுத்தலை விடுத்த நபர் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## மூன்றாவது நாளாக...

செயலகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல்களின் போது சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் சரியான திசையினை நோக்கி நகர்த்திச்செல்வதற்கு விடுதலைப் புலிகளின் சட்டவல்லுநர்கள் உட்பட்ட குழுவினர் பூரண சம்மதத்தைத் தெரிவித்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல்களின்போது உரையாற்றிய விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் -

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குக் காட்டிவரும் ஆர்வத்துக்கு நன்றியைத் தெரிவித்ததுடன் -

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும் எரிக் சொல்ஹெய்ம் தெளிவுபடுத்தினார்.

## ஓமடியாமடு...

மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் அந்தக் குழுவைச் சேர்ந்த நித்தி மற்றும் கஸ்ரோ ஆகியோர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

தொடரிலக்கம் அழிக்கப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியொன்று, ஆர்.பி.ஜி. எறிகணைகள், கிளைமோர் கண்ணி வெடிகள், வயர்கள், மற்றும் இராணுவத் தளபாடங்கள் ஆகியன இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

கொல்லப்பட்ட நித்தி பனிச்சங்கேணியிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி காவல் நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆர்.பி.ஜி. தாக்குதல்களுக்கும், இதன் காரணமாக 50 வயதுடைய கணபதி காளிப்பிள்ளை என்ற பெண்ணின் மரணத்திற்கும் இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் சம்பவமொன்றிற்கும் நேரடியாகப் பொறுப்பானவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காலத்தை...

அதேவேளை - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இது குறித்து ஜனாதிபதியுடன் முன்கூட்டியே பேசிய பின்னரே இதில் கலந்து கொள்வது பற்றி முடிவெடுக்க முடியும் என அறிவித்திருக்கிறது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இக் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து இறுதி முடிவு எடுக்கவில்லை.

இந்த நிலையில் பிரதான எதிர்க் கட்சிகள் எதுவும் பங்கேற்காத நிலையில் ஆளும் கூட்டணிக் கட்சிகள் மட்டுமே இன்றைய கூட்டத்தில் பங்கேற்கவிருக்கின்றன.

இதனால், ஜனாதிபதியின் திட்டம் தோல்வியிலேயே முடிவடையும் என்றும், இதை வைத்துக் காலம் கடத்தும் ஜனாதிபதியின் முயற்சி ஆரம்பத்திலேயே தோல்விகாணும் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

## ஹக்கீமின்...

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஜனாதிபதி செயலகத்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அழைப்புக்குப் பதிலளித்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் சம்பந்தப்பட்ட ஆலோசனை சபை தொடர்பாக தாம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால் தமக்கு ஜனாதிபதியுடன் சந்திப்பு ஒன்றுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும் எனக் கேட்டிருந்தார்.

எனினும் இதுவரை பதில் எதுவும் ஜனாதிபதியின் தரப்பிலிருந்து கிடைக்கவில்லை என முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் கே.எம்.பாயிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் தொடர்பு கொள்ள முயற்சித்துவருவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## ஐக்கிய தேசிய...

இந்தத் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறும் அதற்கான மூன்று காரணங்களை முன்வைப்பதாகவும் ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தாங்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு இடைக்கால நிர்வாக அலகை உருவாக்கும் வகையில் விடுதலைப் புலிகளை காத்திரமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடச் செய்வதற்கும் எமது அரசாங்கம் முனையவில்லை என்பதை தங்களுக்கு அறியத்தருகிறேன.

இந்தவிடயம் தொடர்பான பேச்சுக்களை முதலில் ஆரம்பித்தாலும் கூட நிரந்தரத் தீர்வொன்று காணப்படவேண்டுமானால் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களை ஆராயவேண்டியிருக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்க காலத்தில் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்தபோது 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பேச்சுவார்த்தை மேசையை விட்டு வெளியேறிய விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடர எமது அரசு உறுதியாக இருக்கிறது எனவும் அவர் மேலும் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## புதிய பொலிஸ்...

பின்னர், சந்திரா பெர்னாண்டோ பொலிஸ் தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1971 ஆம் ஆண்டில் பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட சந்திரா பெர்னாண்டோ 1990 இல் பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும், 1998 இல் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரபாவின்...

கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தார். சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவைச் சேர்ந்த அல்பிரட் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், சிறுவர் - சிறுமியரின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து-

தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு, அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் நேரு.குணரட்ணம் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர்.

மண்டபம் நிறைந்த மக்களுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் நூலின் முதல் பிரதியை வெளியிட்டு வைத்தார்.

இந்த நூல் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் பன்முக ஆளுமையைச் சித்தரிக்கும் அதிக ஒளிப்படங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

### தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல:- 1653 திகதி:- 01.10.2004

வெற்றி இலக்கங்கள்

R 7 6 9 7 6 2

(927)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.